வாராந்த சஞ்சிகை

# சுடர் ஒளி

நவம்பர் 12 - 18 - 2014

பக்கம் 24

விலை 30/-



# கார்த்திகைக் காத்திருப்பு

1717 FOLLOW US www.mobitel.lk

மொபிடெல் mTicketing சேவை

365 நாட்களும் 365 இனை அழைத்து புகையிரத பயணச் சீட்டுக்களை ஒதுக்கிக் கொள்ளுங்கள்

Sri Lanka Railways

Sri Lanka Telecom Mobitel

*நிபந்தனைகளுக்குட்பட்டவை.

TRC/EA/ADT/Mobitel/13-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு நனவானது



ஆஸ்திரேலியாவை பழி தீர்க்க 20 ஆண்டுகளாகக் காத்திருந்தது பாகிஸ்தான் அணி. அந்தக் காத்திருப்பு இந்தவருடம் கை கூடியதை பாக். அணி ரசிகர்கர்கள் பெருமெடுப்பில் கொண்டாடிவருகின்றனர்.

1994 ஆம் ஆண்டு 10 என்றவாறு டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி பாகிஸ்தான் வெற்றி பெற்ற போது ஓர்மம் கொண்டெழுந்த அவுஸ்திரேலிய அணி அன்று முதல் 20 வருடங்களாக பாகிஸ்தான் அணியினரை தலைதூக்க விடாது அடித்து துவைத்து வந்தது.

இதனால் டெஸ்ட் தரவரிசையில் பின்னடைவை எதிர்கொண்ட பாகிஸ்தான் அணியின் நீண்டகால சோகத்துக்கு விடை கொடுக்க அருமையான சந்தர்ப்பமாக அண்மையில் துபாயில் இடம்பெற்ற தொடர் அமைந்திருந்தது எனலாம்.

இரண்டு போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி 221 ஓட்டங்களால் இலகுவாக வெற்றி பெற்றது. இதனால் அடுத்த போட்டியில் வெற்றி பெற்று 20 வருட கனவை நனவாக்க வேண்டும் என பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு ஒரு வெறி உண்டாகியிருந்தது. மறுமுனையில் 20 வருட சாதனையை முறியடிக்க விடக்கூடாது என ஆஸ்திரேலிய அணியும் முனைப்புக் காட்டும் என்பதால் இரண்டாவது போட்டி விறு விறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ரசிகர்கள் எதிர்பார்த்தது போன்று ஆஸ்திரேலிய வீரர்கள் முதலாவது போட்டியில் காட்டிய எதிர்ப்பைக் கூட இரண்டாவது போட்டியில் காட்ட முடியவில்லை. பாகிஸ்தான் அணியின் அனல் பறந்த ஆட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஆஸி. அணி பணிந்ததால், 20 வருடக் கனவை பாகிஸ்தான் இலகுவாக எட்ட முடிந்தது. இந்த வெற்றிக்கு அணியின் மூத்த வீரர் யுனிஸ் கான்( 2 சதங்கள், 1 இரட்டைச் சதம்), அணித்தலைவர் மிஸ்பா (டெஸ்ட் போட்டிகளில் அதிவேக அரைச் சதம், அதிவேக சதம் ஆகிய சாதனைகள்) ஆகிய இருவரும், பந்து வீச்சாளர்களுமே முக்கிய காரணம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிக்கலில் சப்பல்



கிரிக்கெட்டின் சாதனைச் சிகரம் சச்சின் டெண்டுல்கர் 'பிளையிங் இட் மை வே' என்ற பெயரில் எழுதியுள்ள சுயசரிதை புத்தகம் உலகம் முழுவதும் வெளியாகியுள்ளது. இந்த நூல் பல சர்ச்சையையும் எழுப்பியுள்ளது.

அண்மையில் இங்கிலாந்து அணியின் மூத்த வீரர் கெவின் பீட்டர்சன் எழுதிய புத்தகத்தால் எழுந்த சர்ச்சை தீ அணைவதற்குள் டெண்டுல்கர் மீண்டும் தீயை மூட்டியுள்ளார்.

பொதுவாக அணியில் தமது இடத்தை தக்க வைத்துக் கொள்வதற்காகவும், சக வீரர்களை தமது பிடிக்குள் வைத்திருப்பதற்கும் வீரர்கள் முதல் அணித்தலைவர்கள் வரையில் பயிற்சியாளரை தமது கைக்குள் வைத்திருப்பது வழமையான ஒன்று. ஆனால் மாறாக 2007 ஆண்டு காலப் பகுதியில் இந்திய அணியின் தலைவராக இருந்த டிராவிட்டை அணித்தலைவர் பதவியிலிருந்து தூக்கி சச்சினை அணித் தலைவராக்க முற்பட்டுள்ளார் அப்போதைய இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல்.

வேலியில் போன ஓணானை பிடித்து சட்டைக்குள் விட்ட கதையாகிபோனது சப்பலின் கதையும். சச்சினை அணித் தலைவராக்க முற்பட்ட விவகாரத்தை சச்சின் எழுதிய சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். இதனால் பெரும் சிக்கலில் மாட்டியுள்ளார் சப்பல்.

# காதல் மன்னன்



மீண்டும் ஒரு காதல் முறிவு.. எமிலியின் 'கதை 'ஓவர்'.. கிரிக்கெட் ஜாம்பவான் ஷேன் வோர்ன் சுழலில் அடுத்ததாகச் சிக்கப் போவது யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஷேன் வோர்ன் சில காலமாக காதலித்து வந்து எமிலி ஸ்காட்டை விட்டு விலகியுள்ளார். இந்தக் காதலின் வயது வெறும் 3 மாதம் தான். அதற்குள்ளாகவே இவர்களின் காதல் முடிவுக்கு வந்துள்ளது. இருவரும் வேறு வேறு வாழ்க்கைச் சூழலுக்கு வந்துள்ளதால் காதலை முடித்துக் கொண்டுள்ளதாக ஷேன் வோர்ன் தெரிவித்துவிட்டார்.

பொதுவாகப் பிரபல்யங்களிடையே இவ்வாறான பிரச்சினைகள் வருவது வழமை. அதேபோன்று ஷேன் வோர்ன் கிரிக்கெட்டில் ஏகப்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியவர். அதேபோல தனிப்பட்ட வாழ்க்கையில் ஏகப்பட்ட காதலிகளுடன் வாழ்க்கையும் நடத்தியவர். இவருக்கு மொத்தமாக 3 குழந்தைகள் உள்ளனர். ஆனாலும் இவரது காதல் வாழ்க்கை மட்டும் முடிவே இல்லாமல் நீண்டு வந்தது.

விளம்பர அழகியான எமிலி ஸ்காட் ஷேன் வோர்னை விட 15 வயது இளையவர் .ஆனால் இந்த வயது வித்தியாசத்தையும் தாண்டி இருவரும் தீவிரமாகக் கடந்த 3 மாதமாகக் காதலில் ஈடுபட்டிருந்தனர். தற்போது இந்தக் காதலும் முடிந்துவிட்டது.

இதற்கான காரணம் என்ன தெரியுமா..? ஷேன் வோர்ன் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள எமிலி ஆசைப்பட்டுள்ளார். ஆனால் அதை ஷேன் வோர்ன் விரும்பவில்லை போல் தெரிகிறது தனக்கு ஏற்கனவே உள்ள குழந்தைகள் போதும் என்று அவர் சாதாரணமாகக் கூறியதால் காதல் முறிந்துள்ளது.

இதற்கு முன்பு இப்படித்தான் நடிகை எலிசபெத் ஹர்லியுடன் 4 மாதங்களாக காதலில் ஈடுபட்டிருந்தார் ஷேன் வோர்ன் . அவர் ஷேன் வோர்னைத் திருமணம் செய்ய விரும்பியிருந்தார். ஆனால் ஷேன் வோர்ன் மறுத்து விட பாடகர் ரிச்சி நெவில்லியை மணந்து கொண்டு எலிசபெத் தப்பிவிட்டார். ஆனால் பின்னர் எமிலி வந்து சிக்கிவிட்டார். இப்போது எமிலியின் காதலும் பிசகியதால் . ஷேன் வோர்னின் காதல் சுழலில் அடுத்து யார் சிக்கப் போகிறார்? என்று காத்திருக்கிறார்கள் ரசிகர்கள்.

# தூக்கியெறியப்பட்ட நட்சத்திரங்கள்

உலகெங்கும் பரந்து வாழும் கிரிக்கெட் ரசிகர்கள் மட்டுமல்லாது சூதாட்டக்காரர்களும் எதிர்பார்த்திருக்கும் பணமழை பொழியும் 8 ஆவது ஐ.பி.எல். திருவிழா அடுத்த வருடம் ஏப்ரல் 8 ஆம் திகதி முதல் மே மாதம் 24 ஆம் திகதி வரை நடைபெறும் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

2008 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட 20 ஓவர்கள் பந்து பரிமாற்றங்கள் கொண்ட இந்தியன் பிரீமியர் லீக் என்றழைக்கப்படும் இந்தப் போட்டிகளில் உள்நாட்டு வீரர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டு வீரர்களும் பெருமளவில் பணத்தை சம்பாதிக்க மறுமுனையில் நடன மங்கைகளின் ஆட்டங்கள், சூதாட்டங்கள் என ஒரு மாதகாலத்துக்கு ரசிகர்களுக்கு சுவாரசியத்துக்கு பஞ்சமில்லை.

ஐ.பி.எல். போட்டிகளை பொறுத்தவரையில் இதுவரை நடந்த 7 தொடர்களில் கிட்டத்தட்ட பத்து அணிகள் விளையாடியிருந்த போதிலும் ஒரு சில அணிகள் திடீரெனத் தோன்றி திடீரெனக் காணாமல் போக, பெயர் குறிப்பிடத்தக்க ஒரு சில அணிகள் மட்டுமே சம்பியன் பட்டத்தை சுவீகரித்துள்ளன.

இதனால் பெருமளவில் பணத்தினை வாரி வழங்கி அணியின் உரிமையாளர்கள் கடந்த போட்டிகளில் தமது அணியில் சிறப்பாக விளையாடாதவர்களை கழட்டி விட்டு விட்டு புதியவர்களை ஏலம் மூலம் எடுப்பதும் மற்றைய அணிகளுடன் வீரர்களை பரிமாறிக்கொள்வதும் வழமை. அதே போன்றுதான் ஒவ்வொரு அணிகளும் தமது வீரர்களை அணிகளுக்குள் பரிமாறிக்கொள்ளும் காலம் டிசம்பர் 12 ஆம் திகதியுடன் நிறைவடைவதனால் அவசர அவசரமாக அணியிலிருந்து சில வீரர்களைத் தூக்கியெறிவதிலும் வீரர்களைப் பரிமாறுவதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனடிப்படையில் மும்பை இந்தியன்ஸ் அணி நிர்வாகம் இரு வீரர்களைப் பரிமாற்றல் அடிப்படையில் வாங்கியுள்ளது. ராஜஸ்தான் றோயல்ஸ் அணியிடம் இருந்து உன்முகச் சந்தையும், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியிடம் இருந்து வேகப்பந்து வீச்சாளர் வினய்குமாரையும் பெற்றுள்ள போதிலும் அவர்களின் விலை விபரம் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

அதே சமயம் முன்னணித் துடுப்பாட்ட வீரராக திகழ்ந்த மைக் ஹஸ்ஸியை மும்பை அணி நிர்வாகம் கழற்றி விட்டுள்ளது. ஹஸ்ஸி சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் ஆடிய போது ஓட்டங்கள் குவிக்கும் இயந்திரமாக விளங்கினார்.

அப்போது அவரை 5 கோடிக்கு மும்பை அணி வாங்கியது. ஆனால் கூடு விட்டு கூடு தாவுவது போன்று அணி விட்டு அணி மாறிய ஹஸ்ஸி 7 ஆவது ஐ.பி.எல். தொடரில் துடுப்பாட்டத்தில் சோபிக்கவில்லை. அதே போன்று அந்த அணியின் மற்றொரு வீரர் பிரவீன்குமாரும் பந்து வீச்சில் சொதப்பியதால் அவரையும் தூக்கி எறிந்து விட்டது மும்பை இந்தியன் அணி நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பொங்கியெழும் இளவரசர்

**- ஆசாத்**

மலையக மக்களின் முடிசூடா மனிதராக விளங்கியவர் சௌமியமூர்த்தி தொண்டமான். அவர் காலத்தில் அடுத்த தலைவராக விளங்கி வந்த செல்லச்சாமி போன்றோரைப் புறம் தள்ளி விட்டு இளவரசராகப் பட்டம் சூட்டிக் கொண்டவர் ஆறுமுகம் தொண்டமான். சௌமிய மூர்த்தி தொண்டமானின் இறப்பின் பின்பு மன்னராக ஆறுமுகம் தொண்டமான் பதவியேற்க, புதிய இளவரசராக செந்தில் தொண்டமான் உருவாகி விட்டார்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமை நேரு குடும்பத்துக்கு எழுதப்பட்டு விட்டது போன்று இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையும் தொண்டமான் குடும்பத்துக்கு நிரந்தரமாகி விட்டது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எவ்வாறு மாற்றமின்றி ஒரு குடும்பத்தின் பரம்பரைச் சொத்தாக விளங்கி வருகிறதோ அவ்வாறே தோட்டத்து தொழிலாளர்களின் வறுமையும், துயரங்களும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. அவர்களின் உழைப்பை உறிஞ்சிக் குடிக்கும் பெருந்தோட்ட உரிமையாளர்கள் முதல் இயற்கை அனர்த்தங்கள் வரை சகல பக்கங்களிலும் அவர்கள்மேல் துயரங்கள் சுமத்தப்படுகின்றன. குளவிகளில் இருந்து கூட அவர்களுக்கு பாதுகாப்பு அற்ற ஒரு பரிதாப நிலை. நாளாந்தம் அவர்களில் பலர் குளவி கொட்டிப் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சிலர் இறந்து போவதும் உண்டு.

இப்படியான ஒரு நிலையில் கொஸ்லந்த மீரிய பெத்த தோட்டத்தில் மண்சரிவினால் ஏற்பட்ட பேரவலம் பலரைப் பலி கொண்டுள்ளது. ஏராளமானோரைத் தாங்க முடியாத இன்னல்களுக்குள் தள்ளியுள்ளது.

மலையக மக்களின் அழுகுரல் வடபகுதி மக்களின் நெஞ்சையும் அதிரச் செய்தது. அவர்கள் படும் துயரம் எமது நெஞ்சிலும் குருதி வடிய வைக்கிறது. இந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு குழுவினர் மாவை சேனாதிராஜா தலைமையில் அங்கு சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் அவர்களின் நிலைமைகளையும் கேட்டறிந்தனர்.

இதன் பின்னர் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் "மலையக மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் . அப்படிச் செய்யாவிடில் வடக்கில் அவர்களை நாம் குடியமர்த்த முடியும் " எனவும் தெரிவித்திருந்தனர்.

அவ்வளவு தான்!பொங்கியெழுந்து விட்டார் இளவரசர் செந்தில் தொண்டமான்.

"தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் முதலில் வடபகுதி மக்களுக்கு வீடுகளையும், காணிகளையும் வழங்கட்டும்.பிறகு மலையக மக்கள் பற்றி அக்கறை காட்டப்படும் " எனத் தெரிவித்திருக்கிறார்.

உதவி புரிவதில் கூட தங்களை விட வேறு சக்திகள் புகுந்து கொள்ளக் கூடாது என்றளவுக்கு இளவரசரின் சாம்ராஜ்ஜியச் சிந்தனை இருக்கிறது. ஆனால் அவர் வரலாற்றை ஒரு முறை புரட்டிப் பார்த்தால் வடக்கு மக்களுக்கும், மலையக மக்களுக்கும் இடையேயுள்ள உறவைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அவர்கள் புரட்டவும் போவதில்லை; புரியவும் போவதில்லை.

> **"மலையக மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிடில் வடக்கில் அவர்களை நாம் குடியமர்த்த முடியும் "**

1948ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் மூலம் 3 இலட்சம் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. அன்று தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அப்பிரேரணையை எதிர்த்து வாக்களிக்காமல் விட்டதன் மூலம் அது நிறைவேறத் துணை நின்றார். இதைக் கண்டித்து தந்தை செல்வா தலைமையிலான குழுவினர் தமிழ் காங்கிரஸ் கட்சியை விட்டு வெளியேறி, தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தனர். அதாவது தமிழரசுக் கட்சியின் ஆரம்பமே மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட ஒரு அநீதிக்கு எதிராக உருவானது என்பதை செந்தில் தொண்டமான் போன்றோர் புரிந்து கொள்ள வேண்டும். மலையக மக்களுக்கும் வடக்கு-கிழக்கு மக்களுக்குமான உறவு 1948 ஆம் ஆண்டிலேயே நிலை பெற்றிருந்தது.

இலங்கையில் காலத்துக்கு காலம் இனக் கலவரங்கள் என்ற பேரில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு படுகொலைகளும், கொள்ளைகளும் இடம்பெற்று வந்துள்ளன. அப்போதெல்லாம் பாதிக்கப்பட்ட மக்களை வடக்கு தமிழர்கள் வரவேற்று ஆதரவளித்து, அரவணைத்து குடியேற இடம்கொடுத்தனர் என்பதும் வரலாறு.

1958ஆம் ஆண்டு தென்பகுதியிலிருந்து இன அழிப்பு நடவடிக்கைகள் காரணமாக வெளியேற்றப்பட்ட தென்பகுதி இந்திய வம்சாவழி மக்கள் கிளிநொச்சி நகரப் புறத்தில் குடியேற்றப்பட்டனர். விசுவ மடு, கல்மடு போன்ற இடங்களில் அவர் களுக்குப் போதிய தொழில் வாய்ப்பு களும் வழங்கப்பட்டன. அவர்கள் தர்மபுரத்துக்குள் நிரந்தரக் குடிமக்களாகி விட்டனர்.

அதே போன்று 1977ஆம் ஆண்டு மலையகத்திலிருந்து விரட்டப்பட்ட மலையக மக்களைக் கிளிநொச்சி ஏற்றுக்கொண்டது. ஆரம்பத்தில் கிளிநொச்சி விவசாயிகளின் காணிகளில் தற்காலிகமாக கொட்டகைகளை அமைத்துக் குடியேறிய மலையகமக்கள் காலப் போக்கில் தமக்கான சொந்தக் காணிகளை கிளிநொச்சியில் பெற்றுக் கொண்டனர். இன்று கிளிநொச்சியில் சாந்தபுரம், பாரதிபுரம் உதயநகர், செல்வா நகர்.அமைதிபுரம் போன்ற பல குடியிருப்புகளில் மலையத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களே பெரும்பான்மையினராக வாழ்கின்றனர். ஆரம்பத்தில் கூலித் தொழில்களையே மேற்கொண்டு வந்த அவர்கள் காலப் போக்கில் விவசாயம், வர்த்தகம் எனப் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டுமன்றி முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இனக் கலவரங்கள் காரணமாக இடம் பெயர்ந்த மலையக மக்கள் குடியேறி வடபகுதி மக்களுடன் இரண்டறக் கலந்து விட்டனர்.

அதாவது மலையக மக்களுக்கும் வடக்கு -கிழக்கு மக்களுக்குமான உறவு நீண்டதும், பிரிக்கமுடியாததுமாகும். ஆனால் 200 வருடங்களுக்கும் மேலாக மலையக மக்களை அடிமைகளாக வைத்திருக்கும் அதிகார பீடங்களுடன் கைகோர்த்து உறவாடி வருபவர் களுக்கு தமிழ்தேசியக் கூட்டமைப்பு மலையக மக்கள் தொடர்பாகக் காட்டும் அக்கறை கசப்பாக இருக்கிறது.

இன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட சில மலையக தொழிற் சங்கங்கள் தோட்ட உரிமையாளர்கள் சங்கத்துடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டு அந்த மக்கள் சம்பள உயர்வுக்காகக் கூட போராட முடியாதவாறு விலங்கு போட்டு வைத்துள்ளனர். அது மட்டுமன்றி கல்வி, சுகாதாரம், வீட்டு விதி போன்ற அடிப்படைத் தேவைகளில் கூட இந்த மக்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர்.

ஆனால் இந்தத் த்லைமைகளோ மக்களைக் கவனிக்காமல் அவர்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாகி அமைச்சுப் பதவிகளையும், பிரதி அமைச்சுப் பதவிகளையும் பெற்று வலம் வருகின்றனர்.

இந்த நிலையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மலையக மக்களுக்கு வடக்கில் காணி வழங்கி வீடமைத்துக் கொடுக்கப் போவதாகக் கூறியது இளவரசருக்கு கோபத்தை மூட்டி விட்டது.

உலகில் எத்தனையோ சாம்ராஜ்ஜியங்கள் சரிந்து விழுந்ததை வரலாறு சொல்கிறது. இதற்கு முடிசூடா மன்னர்



களினதும் இளவரசர்களின் சாம்ராஜ்ஜிம் மட்டும் இதற்கு விதிவிலக்காகி விட முடியாது. இவர்களின் ஏமாற்று அரசியலை மலையக மக்கள் புரிந்து கொண்டு விழிப்படையும் காலம் வெகு தொலைவில் இல்லை.



## மாதாந்த பொது அறிவு தொகுப்பு வெளிவருகின்றது

அரச பதவி உயர்வு பரீட்சைகள், புதிய வேலைவாய்ப்புக்கான போட்டிப் பரீட்சைகள் போன்றவற்றுக்கு அவசியமான பொது அறிவு விடயங்கள், உலக பொருளாதார - அறிவியல், தொழில்நுட்ப நிகழ்வுகளின் ஒவ்வொரு மாத தொகுப்புகள் மாதாந்தம் ஒழுங்குமுறையாக தொகுத்து வழங்கும் ஓர் ஏற்பாட்டை ஒளி அரசி சஞ்சிகை மேற்கொண்டுள்ளது. அந்தவகையில், கடந்த ஓகஸ்ட், செப்டெம்பர் மாத தொகுப்பானது நவம்பர் மாத ஒளி அரசியில் இரண்டு பக்கங்களில் வெளிவந்துள்ளது என அந்த சஞ்சிகையின் ஆசிரியர்பீடம் தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. இலங்கையில் வெளிவரும் மாதாந்த சஞ்சிகைகளில் அரசியல், பாலியல் கலப்பற்றவாறும், குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பார்த்து அறியவேண்டிய பல நல்ல தகவல்களைத் தாங்கியும் நல்லதொரு குடும்பம் என்ற இலக்கில் வெளிவரும் ஒரு சிறந்த சஞ்சிகை என்று மேலும் அதில் தெரிவித்துள்ளது.

இந்தச் சஞ்சிகையை சகல பத்திரிகை முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம், இதுதொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் - இந்த சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் 011 - 5737593, 071 - 4273035 என்ற இலக்கத்திற்கு தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**விறியோகப் பிரிவு,**
**ஒளிஅரசி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளும் சிறுவர் போராளிகளும்



- ந. மாலதி

**நியூசிலாந்தில் வாழும் ஈழத்தமிழர்களில் ஒருவர். கணினித்துறையில் பயற்சி பெற்றவர். நோர்வே அனுசரணையுடன் வந்த போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் வன்னியில் உருவாக்கப்பட்ட வடகிழக்கு மனித உரிமைச் செயலத்தில் தொண்டரடிப்படையில் பணியாற்ற வன்னிக்குச் சென்றார். இறுதி போர் வரை முள்ளிவாய்க்காலில் இருந்து ஐசிஆர்சி கப்பலில் வெளியேறி மெனிக் பாம்முகாமில் அடைக்கப்படும் வரை ஈழத்தில் இருந்தார். இவர் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த மலரவன் என்னும் மாவீரரின் "போர் உலா என்னும் நூலை பென்குவின் பதிப்பகம் மே 2013ல் வெளியிட்டுள்ளது.**

1980களில் விடுதலைப்புலிகள் தங்களின் சீருடை அணிந்த ஏழு வயதுச் சிறுவர்களின் படத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்டதாக மூத்த உறுப்பினர்கள் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வகைப் படங்கள் பொதுமக்களிடையே அந்த அமைப்பை பற்றிய எண்ணத்தை மேம்படுத்தும் என்ற எண்ணமே அன்று நிலவியது. கவனிக்கப்படாது விடுபட்ட சிறுவர்களை எடுத்து அவர்களுக்கு கல்வி கொடுத்து அவர்களைச் சமூகம் மதிக்கும் ஒரு போராளிகளாக ஆக்குவதை ஒரு நல்ல காரியமாகவே விடுதலைப்புலிகள் அந்தக்காலத்தில் நோக்கினர். காலப்போக்கில் இது சீர்குலைந்து சிறுவர்களையும் பரப்புரையின் ஊடாகப் படையில் இணைக்கும் பழக்கமாக மாறியது. இவ்வாறு இணைக்கப்பட்ட பலரை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் பல நிலைகளில் நான் சந்தித்திருக்கிறேன். பவன் 1993ஆம் ஆண்டு தன் 14ம் வயதில் அமைப்பில் இணைந்தார். 1995ஆம் ஆண்டு ஒரு சண்டையில் ஒரு காலை இழந்து பின்னர் ஆறு வருடங்கள் ஆங்கிலமும் கணினிக் கல்வியும் படித்துச் சமாதானச் செயலகத்தின் ஒரு முக்கிய உறுப்பினராகப் பணியாற்றினார்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் இந்தச் சிறுவர் போராளிகளை இணைக்கும் கலாசாரம் 1980களில் உருவாகி வளர்ந்தது. இந்தக்காலத்தில் சிறுவர் போராளிகள் பற்றிய சர்வதேச சாசனமாக ஜெனீவா சாசனம் மட்டுமே இருந்தது. இதில் படையில் இணைக்கப்படுவோரின் வயது 15க்கும் மேலிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. சிறுவர் போராளிகள் பற்றிய ஐ.நா. சாசனங்களோ ஐ.நா. திட்டங்களோ ஐ.நா. நடவடிக்கைகளோ எதுவும் 1980களில் இருக்கவில்லை. ஐ.நா.வின் சிறுவர் உரிமை பற்றிய சாசனம் 1987ஆம் ஆண்டுகளிலேயே பிரகடனப்படுத்தப் பட்டது. அந்தச் சாசனத்திலும் படையில் இணைப்படுவோர் 15 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. விடுதலைப்புலிகளின் வளர்ச்சியோடிணைந்த சிறுவர் போராளிகள் என்னும் விடயம், அதுபற்றிய சர்வதேச சாசனங்களோ அக்கறைகளோ இல்லாத ஒரு காலத்தைச் சேர்ந்தது என்பதே இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது.

1990களின் பிற்பகுதியிலேயே ஐ.நா.வும் ஏனைய சர்வதேச அமைப்புகளும் சிறுவர் போராளிகள் என்னும் விடயத்தை ஒரு பெரும்பரப்புரையாக கையெடுத்தன. 1998ஆம் ஆண்டில் இதுசார்ந்த ஐ.நா.வின் விசேட தூதுவர், ஒலரா ஒட்டுனூ, வன்னிக்கு வந்தபோது 17 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை இணைப்பதில்லை என்று விடுதலைப்புலிகளிடம் இருந்து ஒரு உறுதிமொழி பெற்றார் என்று ஐ.நா. சொல்கிறது. ஆனால், தாம் அவ்வாறு சொல்லவில்லை என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாக இருந்தது. இத்துடனேயே சர்வதேச மட்டத்தில் விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகள் என்ற ஒரு பிரச்சினை உருவாகிறது.

இருவேறு தசாப்தங்களில் உருவான இவ்விரு வளர்ச்சியின் முரண்பாடே விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகள் என்ற பிரச்சினை. ஒரு பக்கம் 1980களில் விடுதலைப்புலிகளின் அமைப்பினுள் நிலைபெற்றுவிட்ட சிறுவர் போராளிகளை இணைக்கும் கலாசாரம். மறுபக்கம் 1990களில் ஆரம்பித்த சிறுவர் போராளிகளை இணைப்பதற்கெதிரான சர்வதேசப் பரப்புரை. விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்த பல முதுநிலை உறுப்பினர்களும் சிறுவர் போராளிகளாக இணைந்தவர்கள். இதனால் இவர்களுக்கு சிறுவர் போராளிகளை இணைப்பது ஒரு மனித உரிமைமீறலாகப் படவில்லை. ஒரு சம்பவம் இதை எனக்கு மிகத் தெளிவாகக் காட்டியது.

விடுதலைப்புலிகளின் மகளிர் படையணிகளின் முதுநிலைத் தளபதிகளாக துர்க்காவும், விதுசாவும் இருந்தனர். இவர்களுடன் இருந்து உரையாடும் சந்தர்ப்பம் எனக்கு ஒருமுறையே கிடைத்தது. நான் சிறுவர் போராளிகள் சார்ந்த வேலைத்திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறேன் என்று அவர்கள் அறிந்தபோது மிகவும் புண்பட்ட குரலில் மிக விரக்தியோடு 17 வயதுக்குக் குறைந்தவர்களை எல்லாம் விடுவிக்குமாறு தமக்கு கட்டளை வந்திருப்பதாக சொல்லிக் கவலைப்பட்டார்கள். இந்த முதுநிலைத் தளபதிகளிடம் சிறுவர் போராளிகளை சேர்க்கக்கூடாது என்ற கொள்கை உறுதி இல்லை. விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் வெளியுலகத்துக்கு மூடப்பட்டிருந்ததும் இதைச் சமாளிக்க ஓரளவு உதவியது எனலாம்.

விடுதலைப்புலிகளின் சிறுவர் போராளிகள் பற்றிய சர்வதேசப் பரப்புரை புலத்துத் தமிழர்களுக்குக் குழப்பத்தையும் கலக்கத்தையும் ஏற்படுத்தியது. சர்வதேச சமூகமும் ஏனைய சிறுவர் உரிமைகளை அசட்டை செய்துவிட்டு இதை மட்டும் மிக மூர்க்கமாக முன்னெடுத்தார்கள். விடுதலைப்புலிகளை மோசமானவர்களாகக் காட்டுவதற்காகவே அவர்கள் இதைப் பூதாகரமாக்குகிறார்கள் என்று புலத்துத் தமிழர்கள் எண்ணினார்கள். அவர்கள் சர்வதேசச் சமூகத்தின் மேல் குற்றம்சாட்டினார்கள். நான் வன்னிக்குச் சென்ற போது சிறுவர் போராளிகள் என்பதைப் பற்றி அங்கு வரும் புலத்துத் தமிழரால் அதிகம் அலசப்பட்டாலும் எனக்கு இது ஒரு புரியாத புதிராகவே இருந்தது. 2005ஆம் ஆண்டு எனக்குத் தெரிந்திருந்த சில உறுப்பினர்களுடன் இதுபற்றிப் பேசியபோது சிறுவர் போராளிகள் இணைவதற்கான மூன்று வகையான காரணங்கள் எனக்குத் தென்பட்டன. இவை பொருளாதாரம், போர் அழிவுகள், விடுதலைப்புலிக் கலாசாரம் ஆகியன. சிறுவர் போராளிகள் பரப்புரையில் சர்வதேச முன்னெடுப்பாளர்களாகச் செயற்பட்ட யுனிசெப் உட்பட்ட அனைத்து அமைப்புகளுக்கும் சிறுவர் போராளிகளை உருவாக்கும் இந்த விசைகள் முக்கியமானவையாகப் படவில்லை. கிரேசா மசேல் என்பவர் 1996 ஆண்டில் எழுதிய அறிக்கையே முதல் சிறுவர் போராளிகள் என்னும் சமூக பிரச்சினைக்கும் சமூகத்தில் இதை உருவாக்கும் ஏனைய அழுத்தங்களுக்கும் உள்ள தொடர்பைக் கோடிட்டுக் காட்டியது. ஆனால் சர்வதேச சமூகம் இவற்றைப் புறந்தள்ளிவிட்டு 18 வயதுக்குக் குறைந்தவர்களை இணைப்பதே மனிதாபிமானத்துக்கு எதிரான பெரிய குற்றம் என்னும் கணக்கில் பரப்புரையை முன்னெடுத்தது. பிற்காலத்தில் ஒரு ஐ.நா. பணியாளர் தனிப்பட என்னிடம் சிறுவர் போராளிகள் என்பது கவர்ச்சிகரமான ஒன்று என்று வர்ணித்தபோது சர்வதேச மட்டத்தில் இதற்கிருந்த கவர்ச்சி பற்றிய தெளிவு எனக்குண்டாயிற்று.

(தொடரும்)



## உணர்வின் ஊற்று - 22

*வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியா யின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள்மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.*

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 30.11.2014** *தரமானவை பிரசுரிக்கப்படும்.*

முகவரி : *உணர்வின் ஊற்று - 22*

சுடர் ஒளி *361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஜனநாயகம் நிலவும் பல நாடுகளில் பெரும் குழப்பங்கள் நிலவுவதாகவும், ஆனால் இலங்கை மட்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தலைமையில் வேகமாக முன்னேறி வருவதாகவும் பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவரின் கருத்துப்படி ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் ஜனநாயக வழிமுறைகள் நிராகரிக்கப்பட்டு தனிநபர் சர்வாதிகாரமே நிலைநாட்டப்பட வேண்டும்.”

# ஆயுதம் மக்கள் கையில்



- அக்கினிக்குமரன்

அண்மையில் இலங்கை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு- செலவுத் திட்ட விவாதத்தின்போது பிரதமர் டி.எம்.ஜெயரத்தின ஆற்றிய உரை மிகவும் முக்கியமானதாகும். ஒரு நாட்டின் பிரதமரின் கருத்தை எவரும் இலகுவில் அசட்டை செய்துவிடமுடியாது.

ஜனநாயகம் நிலவும் பல நாடுகளில் பெரும் குழப்பங்கள் நிலவுவதாகவும், ஆனால் இலங்கை மட்டும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தலைமையில் வேகமாக முன்னேறி வருவதாகவும் பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். அவரின் கருத்துப்படி ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் ஜனநாயக வழிமுறைகள் நிராகரிக்கப்பட்டு தனிநபர் சர்வதிகாரமே நிலைநாட்டப்பட வேண்டும்.

இலங்கையில் பிரகடனப்படுத்தப்படாத மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒரு சகோதர சர்வாதிகார ஆட்சி நிலவி வருகிறது என்பதை எவருமே மறுத்துவிடமுடியாது. அது இங்கு ஜனநாயகத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, ஜனநாயகம் என்ற பதத்தைப் பயன்படுத்துவதைக் கூடப் பிரதமரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

அதேவேளையில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி எட்டு சத வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும், கடந்த 10 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தியின் பலன்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுக்குக் கிடைத்துள்ளது எனவும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளார். மேலும் அவர் “இது மஹிந்த சிந்தனையின் வெற்றி . உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் இலங்கை அரசைப் பாராட்டியுள்ளன. மஹிந்த சிந்தனை யை பின்பற்றி தமது நாடுகளையும் அபிவிருத்தி செய்ய பல நாடுகளில் ஆய்வுகளும் இடம்பெற்று வருகின்றன” என்று தெரிவித்துள்ளார்.

எனவே, ஜனாதிபதி, பிரதமர் ஆகிய ஆட்சி பீடத்தின் உயர் மட்டத்துக்கு உரியவர்களே “ நாடு முன்னேற வேண்டுமெனில் , சர்வதிகாரம் நிலைநாட்டப்பட்டு அதன் வழிநடத்தலிலே தான் நாடு முன்கொண்டு செல்லப்பட வேண்டும்” என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால் நாடு ஒரு சர்வாதிகார யுகத்துக்குள் பிரவேசித்து விட்டது என்பது இலங்கையர்களுக்கு பழையகதை தான். ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் நாட்டில் உயர் சர்வதிகாரிகளாக விளங்கி வருகின்றனர். வரவு- செலவுத் திட்டத்தில் 43 வீதமான நிதி இவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளன. வரவு -செலவுத் திட்டத்தில் ஜனாதிபதியின் போக்குவரத்துச்செலவுக்கு மட்டும் 2500 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் குழந்தைகளுக்கான பால்மாவுக்கு 400கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.


அதாவது உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை எங்கும் மக்கள் மீது சர்வதிகாரம் குவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி விரும்பும் வகையில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்க மறுத்தால் பிரதம நீதியரசரை நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் பதவி விலக்குமளவுக்கு நீதித்துறைகூட சர்வதிகாரப்பிடிக்குள் சிக்கித் திணறுகிறது.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்கள் மீது மட்டுமல்லாது, ஏழைகள், கூலித்தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் என்று அனைத்துத் தரப்பினர் மீதும் கண்மூடித்தனமான ஒடுக்குமுறை கட்டவிழ்க்கப்பட்டு நாட்டில் ஒரு சர்வதிகார வலை விரிவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போர் இடம்பெற்ற காலத்தில் ஜேர்மனியிலும், ஜேர்மனியால் கைப்பற்றப்பட்ட ஏனைய நாடுகளிலும் ஒரு கிராமிய பொலிஸ் அமைப்பு இயங்கிவந்தது. திடீரென மக்களைக் கைதுசெய்வது, கொடிய சித்திரவதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வதை முகாம்களுக்கு அனுப்புவது, சித்திரவதை செய்து கொன்று குவிப்பது எனப் பல விதமான கொடுமைகளை செய்வதே அந்தக் கிராமிய பொலிஸ் அமைப்பின் பணியாகும். ஜனநாயக விரும்பிகள் ,ஊடகவியலாளர்கள் ஆகியோரும்,அவர்களுக்கு புகலிடம் அளிப்பவர்களுமே இந்தப் பொலிஸ் அமைப்பின் இலக்காக இருந்தனர்.

அந்த அமைப்புக்கு எந்த விதத்திலும் குறைவுபடாத வகையில் பயங்கரவாதக் குற்றம். புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்பன இலங்கையில் செயற்பட்டு வருகின்றன.

நாட்டின் தென்பகுதியில் சில கோரிக்கைகளும் அடிப்படையில் போராட்டங்களை நடத்தும் தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோர் மீது குண்டர்களும் பொலிஸாரும் தாக்குதலை நடத்தி வருகின்றனர். கண்ணீர்ப்புகைப் பிரயோகம், தடியடிப்பிரயோகம், துப்பாக்கிச் சூடு என்பன தாராளமாகவே நடத்தப்படுகின்றன. மாணவர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்படுகிறார்கள். அவர்கள் தமிழ் மாணவர்களாக இருந்தால் புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கூறப்பட்டு விசாரணையின்றி நீண்ட காலத்துத்துக்குத் தடுத்து வைக்கப்படுவதும், புனர்வாழ்வுக்கு



அனுப்புவதும் இடம்பெறுவதும் இங்கு சகஜமான ஒன்று தான்.

உயர் கல்வி அமைச்சர் முதல் பல்கலைக்கழக உபவேந்தர்கள் வரை சர்வதிகாரிகளாகவே செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை முற்று முழுதாக பொலிஸ் ,இராணுவ சர்வாதிகாரத்துக்குள் எப்போதோ தள்ளப்பட்டுவிட்டனர். எவரும் எந்த நேரமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படக்கூடும் என்ற அச்சத்துடனேயே வாழவேண்டியுள்ளது.

புலிகளின் மீளெழுச்சிக்கு உதவினர் என்ற போர்வையில் கடந்த வருடம் பலர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் முழங்காவிலில் போர்க்குற்றம் தொடர்பாக விசாரணைக்குழுவிடம் சாட்சியமளிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை விநியோகித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் மேற்படி விசாரணைக்குழுவின் காலத்தை நீடிக்கும்படி கோரினர் என்பதற்காக அவர் விசாரிக்கப்படவுள்ளார் என்று ஆளும் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அதாவது தமக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் முறையீடு செய்வதற்கான உரிமை கூட தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் மீது பெரும் இன அழிப்புப் போரை நடத்தி அவர்களைப் பலமிழக்கச் செய்து, ஒடுக்குமுறையைப் பாவித்து, சர்வாதிகாரத்தனத்தை தக்க வைத்த சிங்கள மக்கள் மீது அதே சர்வதிகாரம் பாயத் தொடங்கியுள்ளது.

அதனால் தான் தன்னுடைய சர்வதிகாரத்தை இன்னும் நிலை நிறுத்த இலங்கையின் ஜனாதிபதியாக உள்ள மஹிந்த ராஜபக் ஷ மூன்றாவது முறையாக தேர்தலில் போட்டியிட உள்ளார். இப்போதும் ஆயுதம் மக்களின் கையில். வாக்கு என்ற அந்த ஆயுதத்தை அவர்கள் உரிய முறையில் பயன்படுத்தினால் தொடரப்போகும் சர்வதிகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# கார்த்திகைக் காத்திருப்பு

பூண்டுகள்,களைகள் என்பவற்றுக்கு ஒரு பொதுக்குணம் உண்டு. இவற்றை யாரும் விரும்பி விளைவிப்பதில்லை. அவை தானே சுயம்புவாக காணிகளிலும் வயல்களிலும் விளைந்து தள்ளுகின்றன. அதிலும் கரிசனையோடு செய்யும் பயிர் களைவிடவும் வேண்டாவெறுப்பாகப் பார்க்கும் இந்தக் களைகள் அசுரவளர்ச்சி பெறுகின்றன. இவை பயிர்களின் வளர்ச்சிக்கு இடையூறு செய்வதோடு மண்ணின் வளத்தை யும் உறுஞ்சுகின்றன. இதனால் களைகளை அறுப்பதே விவசாயத்தின் முதல்பணியாக மாறிவிடுகிறது. ஆனாலும் இந்தக் களைகள் கெட்டிக்காரத் தனமான ஒரு பண்பைக் கொண்டிருப்பதால் தப்பித்துவிடுகின்றன. எப்படியெனில் இவை ஒரு கட்டத்தில் தம் விதைகளை உதிர்த்துவிட்டு மறைந்து விடுகின்றன. ஆனால் மாரிவந்ததும் மண்ணுக்கே தெரியாமல் மீண்டும் முளைத்துவிடுகின்றன. மண்கூட இந்தக் களைகளை மறந்திருக்கும் காலத்தில் களைகளின் விதைகளுக்கு மாரிமழை வரப்போவது எப்படியோ தெரிந்து விடுகிறது. அதனால் பயிர்களை நாசம் செய்வதற்கென்றே மழைக்கு முன்னதாக முளைவிட்டு மழையின் வேகத்தோடு வளர்ந்து விடுகின்றன.

இந்தக் களைகளைப் போலத்தான் இப்போது அரச படைகளும் இருக்கின்றன. போருக்குப் பின்னர் சர்வதேச நாடுகள் வடக்கில் இராணுவப் பிரசன்னம் அதிகரித்திருப் பதாக குற்றம் சாட்டியிருந்தன. சர்வதேசத்தின் அழுத்தத் தில் இருந்து தப்பிக்க இலங்கை அரசு படைக் குறைப்பு செய்வது போன்று ஒரு மாயையை ஏற்படுத்த விரும்பியது. எனவே ஊர்மனை தோறும் இருந்த சிறு சிறு படை முகாம்களை மூடி அவற்றைப் பிரதான தளங்களோடு இணைத்தது. இதன் மூலம் வெளிப்பார்வைக்கு படைக் குறைப்பு நிகழ்ந்ததாகத் தோன்றினாலும் உண்மையில் போர் நிகழ்ந்த காலத்தில் எந்தளவு படையினர் இருந்தார் களோ அதே அளவு படையினரே இப்போது இருக்கிறார்கள். என்னதான் உருமறைப்புச் செய்தாலும் சிலவேளை களில் உண்மைக்குணம் வெளிப்பட்டுவிடத்தான் செய்கிறது. அதிலும் மாவீரர் நாள் வருகிறது என்றால் படையினருக்கு புலிக்காய்ச்சல் பிடித்துவிடுகிறது. இந்தக் காய்ச்சல் சர்வதேச அழுத்தம் பற்றிய பயங்களை எல்லாம் தூரப் போகச் செய்துவிடுகிறது. இதனால் மாரிமழைக்கு முன்னர் முளைக்கின்ற களைகள் போல படையினரும் எங்கெல்லாம் மாவீரர் நாள் நினைவேந்தல் தீபங்கள் ஒளிரப்போகின் றனவோ அங்கெல்லாம் பெட்டிபடுக்கைகளோடு தாங்களும் வந்துவிடுவார்கள். நவம்பர் 27 ஆம் திகதிதான் மாவீரர் நாள்.

ஆனால், படையினர் நவம்பர் முதலாம் திகதியே மாவீரர் நாள் பயத்தில் தங்கள் காத்திருப்பைத் தொடங்கிவிட்டார் கள். அவர்களின் முதல் இலக்கு யாழ்.பல்கலைக்கழகம் தான். முன்னைய காலங்களில் மாவீரர் மயானங்களைச் சூழவும் சீருடைகளின் கண்காணிப்பு இருந்தது. ஆனால் இப்போது மாவீரர் மயானங்கள் படையினரின் பிரதான படைத்தளங்களாக மாறியபடியால் பல்கலைக் கழகத்தை மட்டும் குறிவைத்து சிப்பாய்கள் காவல் இருக்கத் தொடங்கி விட்டார்கள்.

ஒவ்வொரு முறையும் இப்படி அணிலேறவிட்ட நாய்கள் போல படையினர் கண்களில் மண்ணைத் தூவிக்கொண்டு காத்திருப்பதும் பின்னர் தாங்கள் ஏமாந்ததை எண்ணி வெட்கித் தலைகுனிவதும் கார்த்திகை மாதத்தில் வழமை தான். கடந்த வருடமும் படையினர் பல்கலைக் கழகத்தைச் சுற்றி ஆயுதங்களோடு காத்திருக்க வேறொரு கட்டடத்தில் கார்த்திகைத் தீபங்கள் பிரகாசித்திருந்தன. இந்த முறையும் ஏமாறுவதற்காக கார்த்திகையில் காத்திருக்கிறார்கள் படையினர்.

# வழித் தேங்காயும் சீனப் பசுக்களும்

இந்த மாதம் போயா தினத்தில் ஒரு விநோதம் யாழ்ப்பாணத்தில் நடந்தது. ஜாதிக ஹெலஉறுமய கட்சியால் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நூறு பயனாளிகளுக்கு பசு மாடுகள் வழங்கிவைக்கப்பட்டன. யாழில் பேரினவாதக் கட்சி ஒன்றால் இவ்வாறு பசு மாடுகள் வழங்கி வைக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.


வழித்தேங்காயை எடுத்து தெருப்பிள்ளையாருக்கு அடிப்பது போல,சீனாவால் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்ட பசுமாடுகளே ஜாதிக ஹெல உறுமயவினால் மக்களுக்கு வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

எப்போதும் சிறுபான்மையினர் மீது துவேசத்தைக் காட்டும் பேரினவாதக்கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் ஓமல்பே சோபித தேரரினால் இந்தப் பசுக்கள் வழங்கிவைக்கப்பட்டமை தமிழ் மக்களிடையே பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது. திடீரென வெள்ளாடுகளின் மீது ஓநாய்க்கு

**எப்போதும் சிறுபான்மையினர் மீது துவேசத்தைக் காட்டும் பேரினவாதக்கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் ஓமல்பே சோபித தேரரினால் இந்தப் பசுக்கள் வழங்கிவைக்கப்பட்டமை தமிழ் மக்களிடையே பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது. திடீரென வெள்ளாடுகளின் மீது ஓநாய்க்கு பாசம் வந்தால் இப்படியான சந்தேகங்கள் வரும் தானே.**

பாசம் வந்தால் இப்படியான சந்தேகங்கள் வரும் தானே.

கண்டி தலதா மாளிகை முன்பதாக தீக்குளித்து உயிரிழந்த ஜாதிக ஹெல உறுமயவின் இந்திர ர[illegible] தேரர் உலகப் புனிதராம் போதி மாதவனின் பாதம் பட்ட இலங்கைப் பூமியில் மாடு வெட்டுவது தடை



- ஹம்ஷா

செய்யப்பட வேண்டும். இது சிங்கள பௌத்தர்களின் புனித பூமி என்று தெரிவித்திருந்தார். இந்தக் கொள்கையினையுடைய கடும்போக்கு கட்சியான ஹெல உறுமய குறிப்பாக யாழ். மக்களுக்கு பசுக்களை தானமாக வழங்கியுள்ளது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்துவரும் நிலையில் பசுமாடுகளும் சீனாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. காப்பெற் வீதி அமைப்பு,அம்பாந்தோட்டை துறைமுகம், கட்டுநாயக்க கொழும்பு அதிவேகப்பாதை, நுரைச்சோலை அனல் மின்நிலையம், மத்தள விமான நிலையம், கொழும்பு தெற்கு துறைமுக விரிவாக்கத் திட்டம், 661 அறைகள் கொண்ட பிரமாண்டமான ஹோட்டல், தாமரை வடிவிலான கலாசார மண்டபம் என இலங்கையின் பல உட்கட்டுமானப் பணிகளிலே சீனாவின் பங்களிப்பே பிரதானமாக உள்ளது. இவற்றைத் தொடர்ந்து பசு மாடுகளும் வழங்குவதில் கூட சீனா தனது ஆதிக்கத்தை பதித்துள்ளது.இதனால் ஒரு காலத்தில் குட்டிச் சிங்கப் பூராக வர்ணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் விரைவில் குட்டிச் சீனாவானாலும் ஆச்சரியப்படமுடியாது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது. பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்களுக்காக ஒருபோதும் காரியமில்லாமல் எதையும் இனாமாக வழங்குவதில்லை. இந்த வகையில் தேர்தலை இலக்காகக் கொண்டு கடந்த மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வந்து கள உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கியிருந்தார். இப்போது ஹெல உறுமயவும் அதே பாணியில் பசுக்களைத் தானமாக வழங்கியுள்ளது.

இது வரை ஹெலஉறுமயவின் கண்ணுக்கு யாழ்.மக்கள் புலிகளின் பிரதி விம்பமாகத் தெரிந்ததால் பயங்கரவாதிகளின் பிரதேசமாகவும் குடாநாட்டை அடையாளப்படுத்தியிருந்தனர். ஆனால் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு அவர்கள் திடீரென தமிழ் மக்களில் அக்கறை கொண்டு பசுக்களை வழங்கியிருப்பது தேர்தலை இலக்காகக் கொண்டது என்பதே துலாம்பரமாகும். தேர்தல் முடியும் வரை இனாமாக இன்னும் என்னென்ன வரப்போகிறதோ? வாங்குவதை வாங்கி விட்டு வாக்குகளில் மட்டும் உண்மையையும் உரிமையையும் நிலைநாட்டுவது தமிழர்களின் பாணி. அது பேரினவாதிகளுக்கும் தெரியும் என்றாலும் தூண்டில் போட்டுப் பார்க்கிறார்கள்: சின்னமீனாவது சிக்காதா என்று. எந்த மீன் சிக்குகிறது என்று தேர்தலில் தெரிந்து விடும் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடிவருடி அரசியல்

- கோமேஸ்

> “அமைச்சுப் பதவிகள் உள்ளிட்ட பதவி அரசியல் மூலம் முஸ்லிம்களின் அரசி யல் இருப்பு, உரிமைகள், எதிர்பார்ப்புகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் சிக்கல் களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள தேசிய தேர்தலில் யாரும் எதிர்பார்த் திராத முக்கியமான நகர்வு ஒன்றை எமது கட்சி மேற்கொள்ளும்”

அரசியலில் இருப்பவர்கள் யாரும் தாம் செய்த பிழைகளை இலகுவில் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் மஹிந்த அரசின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் எதிர்காலத்தில் பதவி அரசியலைக் கைவிட தமது கட்சி தீர்மானித்துள்ளதாகஇது நாள் வரையும் செய்து வந்த தவறுகளை ஒப்புக் கொண்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ரவூப் ஹக்கீம் "அமைச்சுப் பதவிகள் உள்ளிட்ட பதவி அரசியல் மூலம் முஸ்லிம்களின் அரசியல் இருப்பு. உரிமை எதிர்பார்ப்புகள் என்பவற்றை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. எதிர்வரும் நாள்களில் நடைபெறவுள்ள தேசியத் தேர்தலில் யாரும் எதிர்பார்த்திராத முக்கியமான நகர்வு ஒன்றை எமது கட்சி மேற்கொள்ளும்" என்று தெரிவித்துள்ளார். இதன் மூலம் இத்தனை காலமும் பதவிக்காக முஸ்லிம்களின் அரசியல் இருப்பு, உரிமைகள் என்பவற்றை தமது கட்சி விட்டுக் கொடுத்தே வந்துள்ளது என்ற உண்மையை அவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதுநாள் வரையும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக எத்தனையே வன்முறைகள் இடம்பெற்றன. அந்தத் தருணங்களில் எல்லாம் வாய் திறக்காத முஸ்லிம் காங்கிரஸ். தேர்தல் நெருங்கும் சமயத்தில் திடீரென இப்படியொரு அறிவிப்பினை வெளியிட்டுள்ளமை அரசியல் லாப நோக்கை கொண்டது தான். காற்றுள்ள போதே தூற்றிக் கொள் என்ற நுட்பத்தை முஸ்லிம் காங்கிரஸ் சிறப்பாகவே உபயோகப்படுத்துகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானோரின் ஆதரவை பெற்ற கட்சி . ஆனால் அந்தக் கட்சி முஸ்லிம் மக்களின் விருப்பு ,வெறுப்புக்கள் ,அரசியல் அபிலாஷைகள் என்பவற்றை நிறைவேற்றுவதற்காக இதுநாள் வரையும் எதையும் செய்யவில்லை.

முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் இன்னும் தொடந்து கொண்டு தான் இருக்கின்றன. அண்மையில் தர்கா நகரில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தை தட்டிக் கேட்க முஸ்லிம் அரசியல்வாதிகள் தயாராக இல்லை. காரணம். அவ்வாறு தட்டிக் கேட்டால் அவர்களின் அமைச்சுப் பதவிகள் போய்விடுமே என்ற பயம். அத்துடன் தாம் ஆளும் கட்சியிலிருந்து ஒதுக்கப்படும் சூழ்நிலையும் ஏற்பட்டு விடும் என்பதால் அவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றனர்.

"அரசியலில் நண்பர்களும் இல்லை எதிரிகளும் இல்லை "என்பதைப் போல முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் அடிக்கடி நண்பர்களும் எதிரிகளும் காலத்துக்கு காலம் மாறிக்கொண்டே இருப்பார்கள். இலங்கையில் இருக்கின்ற சிறுபான்மை மக்களில் தமிழருக்கு அடுத்தபடியாக இருப்பவர்கள் முஸ்லிம்கள். அவர்களும் தமிழ் மக்களுடன் இணைந்து குரல் கொடுத்தால் நிச்சயமாக இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச் சினைக்கான 'தீர்வைக் எட்டுவது சுலபம்.ஆனால் தமிழ்க்கட்சிகளோடு இணைந்து செயற்பட பெரும்பாலான முஸ்லிம் கட்சிகள் விரும்புவதில்லை. காரணம்,தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முரண்பாட்டு நிலையை அரசோடு கடைப்பிடிக்க முஸ்லிம் கட்சிகளோ இணக்க அரசியலையே தமது பிரதான வழிமுறையாக கொண்டுள்ளன. இதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பெற தமிழ்மக்களோடு முஸ்லிம்கள் கைகோர்ப்பதை இந்தக் கட்சிகள் ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி தடுக்க முனைகின்றன.

சிறுபான்மை இனங்களுக்கு அதிகாரப் பரவலாக்கல், மீள்குடியேற்றங்களை செய்ய வேண்டும் என மேற்குல நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்கள் கொடுக்கும் போது கூட, அந்த நிலைப்பாட்டுக்கு எதிராகவே முஸ்லிம் காங்கிரஸ் குரல் கொடுப்பது தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

ஆனால் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களால் தீர்வு வருமானால் தனியே தமிழர்களுக்கு மட்டுமல்லாது முஸ்லிம் மக்களுக்கும் நன்மையே கிடைக்கும். இதை நன்கு தெரிந்து கொண்டும் இலங்கையில் உள்ள முஸ்லிம் தரப்புகள் சர்வதேசத் தலையீட்டை விடாப்பிடியாக எதிர்த்தே வருகின்றனர். அரசின் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு அதே சமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் போது அதன் பலன்களையும் தாம் அனுபவிக்கலாம் என்ற சுயநலமே முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு.

தமிழர்களின் இரத்தம் சிந்திய போராட்டத்தின் மூலம் கிடைத்த விளைவுகளில் ஒன்று தான் மாகாணசபை முறைமை என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட மாகாணசபையில் தமிழர்கள் ஆட்சி அமைக்காமல் போனமைக்கு முஸ்லிம் காங்கிரஸே பிரதான காரணமாகும்

“கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் ஒருவருக்கு முதலமைச்சர் பதவியும் தருகிறோம். கூட்டமைப்பு ஆட்சியமைக்க ஆதரவு தாருங்கள் " என்று தமிழர் தரப்பு கெஞ்சிக் கேட்டபோது கூட அதை மறுதலித்து,வழமைபோல அரச தரப்புக்கே ஆதரவளித்த கட்சிதான் முஸ்லிம் காங்கிரஸ். ஆனால் அப்படி தமிழர் தரப்பை எட்டி உதைத்து விட்டு அரசுடன் ஒட்டிக் கொண்டதற்கான பலனை இப்போது முஸ்லிம் காங்கிரஸ் அனுபவித்து வேதனையில் வாடுகிறது.

தமிழர்களோடு ஒரு காலத்தில் பின்னிப்பிணைந்திருந்த முஸ்லிம்கள் இன்று சற்று எட்ட நிற்பதற்கு ஒரு காரணம் இருக்கவே செய்கிறது. வடமாகாணத்திலிருந்து 1991ஆம் ஆண்டு முஸ்லிம்களை வெளியேற்றிய சம்பவமே அது.

அவர்களை வெளியேற்றிய விடுதலைப் புலிகள் கூட அந்தச் சம்பவத்துக்கு மன்னிப்புக் மீண்டும் முஸ்லிம்கள் தங்களின் சொந்த இடங்களில் வந்து மீளக்குடியேற வேண்டும் என பின்னைய நாள்களில் கோரியிருந்தார்கள். அப்படியும் முஸ்லிம்களின் கோபம் ஆறவில்லை.

ஆனால் 1995ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை யாழ்ப்பாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. புலிகள் இல்லாத யாழ்ப்பாணத்தில் முஸ்லிம்கள் குடியேறுவதற்கு எந்த ஒரு தமிழரும் தடையாக இல்லை. அவர்களின் பாடசாலைகளையோ, பள்ளிவாசல்களையோ குடியிருப்புக்களையோ தமிழ் மக்கள் ஆக்கிரமிக்கவில்லை .

இந்த நிலையில் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வந்த போது முஸ்லிம் மக்களின் குடியேற்றத்துக்கு தமிழ் மக்களே தடையாக இருக்கின்றார்கள் என்ற சாரப்பட கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால் உண்மையில் எந்த வொரு சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் மக்களின் குடியேற்றத்தை தடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் நினைத்தது இல்லை.ஆனால் முஸ்லிம் மக்களையும் தமிழ் மக்களையும் ஒன்று சேர விடாமல் அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் துவேசத்தை ஊட்டி வருகின்றன.

இந்த நிலையில் தான் தேர்தல் நெருங்கும் நேரத்தில் தனி முஸ்லிம் மாவட்டக் கொள்கை என்ற கொடியினை தூக்கிப் பிடிக்க தொடங்கிவிட்டது முஸ்லிம் காங்கிரஸ். இதுவும் ஒரு இனக்குரோதச் செயற்பாடே.தமிழர்கள் அல்லாத தனிமுஸ்லிம் மாவட்டத்தை அந்தக் கட்சி கோருகிறது. எனினும் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. இதனைச் ஒரு சாட்டாக காட்டி முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து வெளியேறுவது போல நாடகமாடி தேர்தல் முடிந்ததும் மீண்டும் அரசோடு ஒட்டி உறவாடி பதவிக்கதிரையில் அதுகுந்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளம் போல அடிக்கடி முருங்கைமரத்தில் ஏறும் முஸ்லிம் காங்கிரஸின் தந்திரம் நெடுநாளைக்குப் பலிக்காது.ஒரு நாள் விக்கிரமாதித்தன் வேதாளத்தை வெட்டி வீழ்த்தத் தான் போகிறான்.அதுபோலவே முஸ்லிம் காங்கிரஸும் அடிவருடி அரசியல் செய்தால் அடியோடு சாய்வது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● வினோதினி

காதலர் தினக் கொண்டாட்டங்கள் போன்ற வற்றையும் அடிப்படைவாத அமைப்புகள் மூர்க்கத் தனமாக எதிர்க்கின்றன. காதலர் தினத்தின்போது பொது இடங்களில் சந்தித்துக்கொள்ளும் காதலர்களிடம் தாலியைக் கொடுத்துக் கட்டிக்கொள்ளச் சொல்வது என்று இவர்கள் செய்யும் அராஜகம் கொஞ்சநஞ்சம் அல்ல.



# காதலும் கலாசாரக் காவலர்களும்

பிரான்ஸில் நடந்த சம்பவம் இது. தமிழ் எழுத்தாளர் ஒருவர் பிரெஞ்ச் தெரிந்த தனது நண்பருடன் ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார். எதிர் இருக்கை யில் ஒரு ஜோடி, சூழலையும் மறந்து மிகவும் நெருக்கமாக இருந்தார்கள் (முத்தம் உட்பட). இதைப் பார்த்த எழுத்தாளர் தன் நண்பரிடம், இதெல் லாம் நம் நாட்டில் சாத்தியமா? என்று கேட்டாராம். ஏன், உங்களுக்கு அத் தனை ஆசையா? என்றாராம் நண்பர் சிரித்துக்கொண்டே. இல்லை. அந்த ஜோடியின் அருகில் இருப்பவரைப் பாருங்கள். எதுவுமே நடக்காததுபோல் புத்தகம் படித்துக்கொண்டிருக்கிறார். அதுதான் நம் நாட்டில் சாத்தியமாகுமா என்று வியந்துகொண்டிருக்கிறேன் என்றாராம் அந்த எழுத்தாளர்.

இலங்கையில் இதுபோன்ற காட்சி களைச்சாதாரணமாக எடுத்துக்கொள்வதில் பல்வேறு சமூகச் சிக்கல்கள் இருப்பதை மறுக்க முடியாது. இலங்கையில் சரா சரிக் குடும்ப அமைப்பின் பின்னணியிலி ருந்து வரும் யாரும் இந்தக் காட்சியைச் சாதாரணமாகக் கடந்துவர மாட்டார்கள் தான். ஆனால், பொதுவெளியில் காதலர் கள், தம்பதியர் தங்கள் அன்பைப் பரிமாறிக் கொள்வதைத் தடுக்கும் வகையில் கலாசாரக் காவலர்கள் நடந்துகொள்வது தான் இன்று பெரும் பிரச்சினையைக் கிளப்பி யிருக்கிறது. இந்தியாவின் கேரளத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த முத்தப் போராட்டம் இதற்குச் சரியான உதாரணம்.

கோழிக்கோட்டில் உள்ள உணவ கம் ஒன்றில் ஆணும் பெண்ணும் முத்தமிட்டுக்கொள்ளும் காட்சி தனியார் தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப் பப்பட்டது. இந்தியாவில் பேசுவதற்கும் சாப்பிடுவதற்கும் தான் வாயைப் பயன் படுத்துவோம். முத்தம் என்ற ஒன்று நம் நாட்டி லேயே கிடையாதே என்ற தார்மிக கோபத்தில் கொதித்தெழுந்த ஆர்.எஸ்.எஸ். பின்னணி கொண்ட யுவ மோர்ச்சா என்ற அமைப்பு, அந்த உணவகத் தைத் தாக்கிச் சேதப்படுத்தியது. இந்த அராஜ கத்துக்கு எதிராகப் போராட வேண்டும் என்று ஃபேஸ்புக் மூலம் சுதந்திரச் சிந்தனை யாளர்கள் என்ற அமைப்பினர் ஒன்று திரண்டனர். கிஸ் ஒஃப் லவ் (அன்பின் முத்தம்)என்ற பெயரில் முத்தப் போராட்டம் செய்ய அந்த அமைப்பு முடிவு செய்தது.

கொச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஆயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் திரண்டனர். நடுத்தர வயது ஆண்களும் பெண்களும் இதில் அடக்கம். யுவ மோர்ச்சா, ஏபிவிபி, பஜ்ரங் தள் போன்ற இந்து அமைப்புகளும் முஸ்லிம் அமைப்பு ஒன்றும் இந்தப் போராட்டத்துக்கு எதிராகக் களத்தில் இறங்கின. எனினும் ஏற்பாடு செய்யப்பட்டது போல், முத்தப் போராட்டம் நடைபெறாமல் காவல்துறை கடமையாற்றியது. போராட்டக் காரர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

எனினும், பொலிஸ் வாகனத்துக் குள்ளும், காவல் நிலையத்திலும் முத்த மிட்டுக்கொண்டு தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யவும் அவர்கள் தயங்கவில்லை. இதற்கி டையே, கலாசாரக் காவலர்களின் கடும் எதிர்ப் பால் கிஸ் ஆஃப் லவ் ஃபேஸ்புக் பக்கமும் ஃபேஸ்புக் நிறுவனத்தால் முடக்கப்பட்டது. தங்கள் தரப்பின் நியாயத்தை, அந்த அமைப் பினர் ஃபேஸ்புக்குக்குப் புரியவைத்த பின்னர், மீண்டும் அந்தப் பக்கம் திறக்கப்பட்டது.

### அடிப்படைவாதம் என்ற ஆபத்து

போராட்டத்தில் கலந்துகொண்ட பலர், கலாசாரக் காவலர்களின் அத்து மீறலைக் கடுமையாக எதிர்க்க வேண்டிய ஒரே காரணத் துக்காகத் தான் இந்த முத்தப் போராட்டத்தை நடத்த முடிவு செய்தோம் என்று குறிப்பிடுகின் றனர். இப்படி யான அதிரடியான முடிவுதான் தங்கள் போரா ட் டம் குறித்த விரிவான கவனத்தை ஈர்த்தி ருப்பதாக அவர்கள் தெரிவிக்கின் றனர். வாழ்வதற்கான அடிப்படை உரிமை, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு எதிரானவைதான் காதலர்கள் மீதான தாக்குதல்கள் என்று இந்த அமைப்பி னர் கொந்தளிக்கிறார்கள்.

### காரணம் கலாசாரமா?

காதலர் தினக் கொண்டாட் டங்கள் போன்றவற்றையும் அடிப் படைவாத அமைப்புகள் மூர்க்கத்த னமாக எதிர்க்கின்றன. காதலர் தினத்தின்போது பொது இடங்களில் சந்தித்துக்கொள்ளும் காதலர்களிடம் தாலியைக் கொடுத்துக் கட்டிக்கொள்ளச் சொல்வது என்று இவர்கள் செய்யும் அராஜகம் கொஞ்சநஞ்சம் அல்ல.


காதலுக்குத் தண்டனை என்ற பெயரில், இந்தியாவின் மேற்கு வங் கத்தில் ஒரு பெண்ணைப் பஞ்சா யத்துத் தலைவர்கள் உட்பட, அதே ஊரைச் சேர்ந்தவர்கள் பாலியல் பலாத்காரம் செய்த சம்பவம் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கலாசாரக் காவலின் தீவிரம் எந்த எல்லையையும் எட்டும் என்பதற்கு உதார ணம் இது. கலாசாரத்தை விடவும் மேன்மை யானது மனிதநேயமே என்பதை நாம் இன்னும் உணரவில்லை என்பது தான் உண்மை. இதுபோன்ற தருணங்களில் மதத்தின் அடிப்படையில் வேறுவேறு துருவங்களில் செயற்படும் இந்து அடிப்படைவாத அமைப்பு களும், முஸ்லிம் அடிப்படைவாத அமைப்புகளும் ஒரே நேர்கோட்டில் வரு வதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

அடிப்படையில், சமூக ஒழுக்கம், பண் பாடு என்று பல்வேறு பெயர்களைச் சொன் னாலும் தங்கள் சமூகத்துக்குள் கலப்பு நிகழ்ந்துவிடக் கூடாது என்ற பதற்றம்தான் அடிப்படைவாத அமைப்புகளை இயக்கு கிறது. காதல், கலப்புத் திருமணம் போன்ற வற்று க்கு முற்றிலும் எதிரான நிலைப்பாட்டை அந்த அமைப்புகள் எடுப்பதற்கும் காரணம் இது தான். இயல்பாகவே இவற்றுக்கு எதிரான மனப்பான்மையில் இருக்கும் பெற்றோர் களுக்குத் தார்மீக ஆதரவை இதுபோன்ற அமைப்புகளும், குறிப்பிட்ட சில கட்சி களும் தாராளமாகத் தருகின்றன. அதன் மூலம் அரசியல் ஆதாயத்தையும் அந்த அமைப்புகள் பெறுகின்றன என்பதைச் சொல்லத் தேவை யில்லை.

இலங்கையில் பெண்கள், குழந்தைகள் மீது நடக்கும் பாலியல் பலாத்கார நிகழ்வு களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றன. வீதிகளில், பஸ்களில் ஏன் வீடுகளிலேயே பாலியல் ரீதியான அச்சுறுத்தல் களை எதிர்கொள்ளும் நிலையில் பல பெண்கள் இருக்கின்றனர். இந்தியாவில் 53.22 % குழந்தைகள் ஆண்டுதோறும் பாலியல் வன்முறைக்கு உள்ளாகிறார்கள் என்று சொல்கிறது ஐ.நா-வின் புள்ளி விவரம்.

இவை பற்றியெல்லாம் எந்தக் கலாசாரக் காவலர்களும் கவலைப் படுவ தில்லை. காதலர்கள் பரிமாறிக்கொள்ளும் முத்தத்தால்தான் உங்கள் கலாசாரம் பறிபோகிறதென்றால் கலாசாரத்தின் உண் மையான அர்த்தம்தான் என்ன? யாழ். கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளில் சந்திக்கும் காதலர்களை அதட்டி வெருட்டு வதும் அவர்களைப் புகைப்படம் எடுத்து, பாலியல் பசியோடு காத்திருக்கும் வியாபர இணையங்களுக்கு கொடுப்ப துவும் தான் கலாசாரக் காவலர்களின் கடமையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹரிஸ்

**அனர்த்தம் இடம் பெற்ற உடன் அந்தப் பகுதிக்கு விரைந்த அரச அடிவருடி ஒருவர் "நீங்கள் ஐக்கிய தேசியக்கட்சியின் ஹரினுக்கு தானே வாக்கு போட்டீர்கள். அவரிடம் போய் நிவாரணத்தைக் கேளுங்கள்" என்று அதட்டியுள்ளார்.**

# உதவவும் மனம் வேண்டும்

பதுளை மீரியபெத்த மண் சரிவில் சிக்கியிருப்பவர் களை மீட்கும் பணிகள் பல நாள்களை விழுங்கி, கடைசியாக நவம்பர் 09ஆம் திகதியோடு முடிவுக்கு வந்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கருத்துப்படி 13சடலங்களே மீட்கப்பட்டு இருக்கின்றன. அத்துடன் இந்த அனர்த்தத்தில் 38 பேர் மட்டுமே காணாமல் போனதாகவும் அரசாங்கம் அறிக்கையிட்டிருக்கிறது.

மண்சரிவு நடந்தவுடன் 350 பேர் வரை காணாமற் போனதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் சில நாள்களின் பின்னர் "இல்லை இல்லை. வெறும் 218 பேரே காணாமல் போயுள்ளனர் " என்று அரசு பின் வாங்கியது. ஆனால் அந்தக் கணக்குக் கூட நீண்ட நாள்கள் தாக்குப் பிடிக்கவில்லை. "இறுதியான கணக் கெடுப்புகளின்படி 148 பேரே காணாமல் போயுள்ளனர்" என்றும் அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையம் தெரிவித் திருந்தது. ஆனால் தற்போது அது கூடத் தப்புக் கணக்கு என்று அரசு ஒப்புக் கொண்டு காணாமல் போனோரின் எண்ணிக்கை 38 என்று சொல்லி யிருக்கிறது. சில வேளைகளில் இந்த எண்ணிக்கை சில நாள்களில் இன்னும் குறையவும் கூடும். இவ்வாறு காணா மல் போனோரின் எண்ணிக்கையை அடிக் கடி குறைத்ததில் இருந்து உண்மை களை யும் தன் பக்க தவறுகளையும் மூடி மறைக்க இந்த அரசாங்கம் படாத பாடுபடுகிறது என்பது தெளிவாகப் பலருக்கும் புரிந்தி ருக்கும்

அரசாங்கம் எதிர்காலத் தேர்தல்களை மையமாக வைத்தே இந்த மூடி மறைப்புகளை செய்கிறது என்பதை ஏற்கனவே எதிர்கட்சி பிரமுகர் கள் தெளி வாக கூறிமுடித்துவிட்டனர். இந்தப் பேரனர்த்தம் இடம்பெற்ற உடன் அரசு நடந்து கொண்ட விதம் இலங்கை தீவில் அனர்த்தம் ஒன்றைக் கூட எதிர் கொள்ள இந்த அரசாங்கம் திராணியற்று இருக்கிறதா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ளது. அத்துடன் மண்சரிவு சம்பந்தமாக விசாரணை நடத்தும் பொறுப்பை ஜனாதிபதி பொலிஸ்மா அதிபரிடம் கையளித்திருப்பதான செய்திகளையும் கேட்க முடிகிறது. இது திருடனே இன்னொரு திருடனைப் பற்றி விசாரணை செய்வது போல இருப்பதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

அறிக்கைகளையும், நிவாரணங்களையும் கிள்ளித் தெளித்து விட்டால் மலையக மக்களின் குரலை மண் போட்டு மூடி விடலாம் என்றே அதிகார பீடம் எண்ணுகின்றது. ஆனாலும் அந்த நிவாரணங்களும் அதிகாரிகளால் ஒழுங்காக வழங்கப்படவில்லை.

அனர்த்தம் இடம்பெற்ற உடன் அந்தப்பகுதிக்கு விரைந்த அரச அடிவருடி ஒருவர் "நீங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஹரினுக்கு தானே வாக்கு போட்டீர்கள். அவரிடம் போய் நிவார ணத்தைக் கேளுங்கள்" என்று அதட்டி யுள்ளார். இன்னும் சில அரசியல் வாதி கள் மீரிய பெத்தைக்குச் சென்று பரம சிவன் கழுத்து பாம்புகள் போல வெறுமனே சௌக்கியம் விசாரித்து விட்டு. அதை ஊடகங்களில் பிரசுரித்து விளம்பரம் தேடுகிறார்கள். ஆனால் அவர்கள் எவரும் மலையக மக்கள் காலாதிகாலமாக எதிர்கொண்டு வரும் அச்சுறுத்தல்களிலிருந்து அவர்களை மீட்கத் தயாரில்லை. அவர்களுக்கு தேவை, அந்த மக்களின் அழுது வடியும் துயர் தாங்கிய முகங்கள் மட்டுமே. பிச்சைக்காரன் புண்ணை காட்டி பிச்சை எடுப்பதை போல அதிகாரிகளும் அரசியல் வாதிகளும் மலையக மக்களின் துன்பங்களுக்கு உதவுவது போலக் காட்டியே வாக்குப் பிச்சை எடுப்பது வழமை.

மண் சரிவு நடந்த மறுதினம் ஜனாதிபதி கூட தன் மகனுடன் ஹெலியில் ஏதோ சுற்றுலா செல்வதைப் போலவே மீரிய பெத்தைக்கு வந்தார். பாதிக்கப்பட்ட பிள்ளைகளை அரசாங்கம் பொறுப்பெடுக்கும் என கூறி விட்டு. எல்லோருடனும் சிரித்த படி நின்று புகைப்படம் எடுத்துவிட்டு வந்த ஹெலியிலேயே பறந்து போய் விட்டார். அவர் கூட மலையக மக்களின் நெடுங்காலக் கண்ணீரைத் துடைக்க ஒரு வழி சொல்லவில்லை.



தமது உயிரை பணயம் வைத்து. மலைகளில் கொழுந்து பறித்து. நாட்டின் அந்நிய செலாவாணியில் குறிப்பிட்ட அளவு செல்வாக்கை செலுத்தும் மக்களின் லயன் குடியிருப்பு வாழ்க்கைக்கான முடிவு இன்னும்கிடைக்கவில்லை. மண்ணோடு மண்ணாகிப் போன கொஸ்லந்த மீரியபெத்த போல பல குடி யிருப்புகள் இன்னும் மலையகத்தில் மண் சரிவு அபாயத்தை எதிர்கொண்டே படியே உள்ளன. அவர்களுக்கான வீடமைப்பு பற்றி இதுவரை எந்த அதிகாரிகளும் வாய் திறக்கவில்லை. அந்த மக்களை பிரதிநிதித்துவ படுத்துவதாக கூறிக் கொண்டு. ஆளும் கட்சியுடன் சேர்ந்திருந்து சுகபோகங்களை ஆண்டு அனுபவிப்பவர்கள் கூட எவரும் இந்த மக்களைத் திரும்பி பார்க்கவேயில்லை

இந்த நிலையில் துன்பப்படும் மக்களுக்கு தோள் கொடுக்க யாராவது தயாரானால், பிரதேச வாதத்தை தூண்டி உதவ வருபவர்களை துரத்துவதில் மலையக அரசியல்வாதிகள் குறியாக இருக்கின்றனர்.

மண்சரிவால் பாதிக்கப்பட்ட மீரிய பெத்த பகுதி மக்களுக்கு வடமாகாண சபை உதவ முன்வந்தது. அங்குள்ள மக்களுக்கு வடக்கில் காணிகளை வழங்கி வீடுகளை அமைக்கவும், அனர்த்தத்தில் பெற்றோரை இழந்த சிறுவர்களை பராமரிக்கவும் தயாராக உள்ளதாகவும் வடமாகாண சபை அறிவித்திருந்தது. அத்துடன் " மக்களின் ஆபத்து மிகுந்த லயன் குடியிருப்பு வாழ்க்கைக்கு முடிவு கட்ட வேண்டுமானால் மலையகத்துக்கு என்று தனியான வீடமைப்பு அதிகார சபை நிறுவ வேண்டும் " என அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார் வடமாகாண முதல்வர்.

ஆனால் வடக்கு மாகாண மக்களின் இந்த தோள் கொடுப்பை கேலி செய்வதிலேயே அக்கறை எடுத்திருக்கிறது அரசு. "ஏற்கனவே பாதிக்கப்பட்ட பிள்ளைகளை பொறுப்பெடுக்க அரசாங்கம் முடிவெடுத்து விட் டது. அந்தப் பிள்ளைகளின் பெய ரில் வங்கி கணக்கு ஆரம்பிக்க போகிறோம். வடக்கு முதல்வர் விரும்பினால் அதில் நிதியை வைப்பிடலாம். எங்கள் மீது நம்பிக்கை இல்லாவிட்டால் தானே ஒரு வங்கிக் கணக்கைத் திறந்து அதில் வைப்பிடலாம்" என வடக்கு முதலமைச்சருக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறார் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர. அவர் அப்படித் தானே சொல்வார். ஏனெனில் மண் சரிவில் புதையுண் டோரை காப்பாற்றுவதற்கான மீட்பு பணி தொடங்க முதலே "அனைவரும் உயிரிழந்திருக்க வேண் டும்" என கூறிய அனர்த்த அமைச்சரல் லவா அவர்.


இதேவேளை அமைச்சர் செந்தில் தொண்டமானும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பிடி பிடித்திருக் கிறார். "முதலில் வடக்கு மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் வழியைப் பாருங்கள். அதன் பின்னர் மலையக மக்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது பற்றி யோசிக்கலாம்" என்று கிண்டலடித்தி ருக்கிறார். ஒருவேளை வட மாகாணசபை மலையக மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து விட்டால் தங்களுடைய அரசியல் ஆட்டம் மலையகத்தில் செல்லு படியற்றதாகி விடும் என்பதாலேயே மலையக அரசியல் வாதிகள் கூட்டமைப்பின் மீது பாய்கிறார்கள் போலும்.

உதவ வருபவனை கேலி செய்வதை விடுத்து விட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது செய்தாலாவது இந்த சுகபோக அரசியல் வாதிகளுக்கு வருங்காலத்தில் தேர்தலுக்கு உதவியாக இருக்கும். உண்மை யாக உதவா விட்டாலும் வாக்குகளுக் காகவேனும் உதவலாமே? ஆனால் அதற்குக் கூட மலையகத்து சுகபோக அரசியல் வாதிகளுக்கு மனமில்லைப் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## ஆன்மீகத் தொடர் - 38



சீரடி சாயி பாபா, எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்

**பை**யன் சென்று உடனே திரும்பி வந்து இல்லையென்றும், அவர் வீடு பூட்டியிருப்பதாகவும் கூறினான். பின்னர் பாபா அவனை மளிகைக் கடைக்காரர் பாலாவிடம் சென்று அவரிடம் இருந்து குறிப்பிட்ட கை மாற்றை வாங்கி வரும்படிக் கூறினார். இந்த முறையும் பையன் வெற்றி பெறாமல் திரும்பி வந்தான். இந்தப் பரிசோதனை இரண்டுமூன்று முறை அதே விளைவுடன் நடத்தப்பட்டது.

நாம் அனைவரும் அறிந்தவாறு ஸாயிபாபா வாழ்ந்து கொண்டு இருக்கின்ற இயங்கிக்கொண்டிருக்கின்ற அவதாரமாகும். பின்னர் இந்த அற்பத் தொகையான ஐந்து ரூபாய் அவருக்கு ஏன் தேவைப்படுகிறது? அதனைக் கைமாற்றாகப் பெறுவதற்கு அவர் ஏன் அரிதின் முயல வேண்டும் என்று சிலர் வினவக்கூடும். உண்மையில் அவருக்கு இந்தத் தொகை தேவையிருக்கவில்லை. நந்துவும் பாலாவும் அவரவர் இடங்களில் இல்லை என்பதை பாபா நிச்சயமாக முழுமையும் தெரிந்து கொண்டே இருந்தார். இந்தவழி முறையை பிரமத்தினை எய்த விழைகின்றவருக்குரிய ஓர் சோதனையாக மேற் கொண்டார் போலும். அந்தப் பெருந்தகை கரன்சி நோட்டுக்களின் கற்றை ஒன்றினைத் தன் பையில் வைத்து இருந்தார். அங்ஙனம் அவர் உண்மையிலேயே ஆர்வமுள்ளவராக இருந்திருப்பின் ஐந்து ரூபாயைப் பெறுவதற்காக பாபா தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கும் அந்தத்தருணம் அங்கே அமைதியாக அமர்ந்து கொண்டு நிகழ்வனவற்றில் வெறும் மேலோட்டப் பார்வையாளராக இருந்திருக்கவே மாட்டார். ப்பா தமது மொழிகளைக் காப்பாற்றுவார் என்றும், கடனைத் திருப்பிக் கொடுத்து விடுவார் என்றும், தேவையான பணமும் ஓர் அற்பத் தொகையே என்றும் அவர் அறிந்தே இருந்தார். எனினும் அவருக்கு ஓர் உறுதியான தீர்மானத்துக்கு வரவோ, தொகையை முன்வந்து அளிக்கவோ இயலவில்லை. அத்தகைய மனிதர் உலகிலேயே மிகப்பெரிய பொருளான பிரம்மஞானத்தை பாபாவிடமிருந்து பெறவிரும்பினார். பாபாவிடம் அன்பு பூண்ட வேறெந்த மனிதனும் சும்மா பார்த்துக்கொண்டிருப்பதற்கு பதிலாக உடனடியாக பாபாவுக்குத் ஐந்து ரூபாயை அளித்து இருப்பான். இந்த மனிதன் இயல்போ வேறானதாக இருந்தது. அவர் எந்த விதப் பணமும் கொடுக்கவில்லை. அமைதியாகவும் அமர்ந்திருக்கவில்லை. திரும்பிச் செல்வதற்குப் பதட்டமாக இருந்தமையால் பொறுமை இழக்கத் தொடங்கினார். பாபாவிடம் மன்றாடி "ஓ பாபா! தயவு செய்து சீக்கிரம் எனக்கு பிரம்மத்தைக் காண்பியுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். பாபாவும் "ஓ எனதருமை நண்பனே! நீ பிரம்மத்தைக் கண்ணுறும் பொருட்டாகவே இந்த இடத்தில் அமர்ந்து கொண்டு நான் நுணுக்க விபரமாக ஆய்ந்த வழிமுறைகளையெல்லாம் நீ புரிந்து கொள்ளவில்லையா? சுருக்கமாக அவை இவ்வாறானதாகும். பிரம்மத்தினைக் கண்டுணர்வதற்கு ஒருவன் ஐந்து பொருள்களைக் கொடுக்க வேண்டும். அதாவது ஐந்து பொருள்களைச் சமர்பிக்க வேண்டும். அவையாவன (1) ஐந்து பிராணன்கள் (முக்கிய சக்திகள்) (2) ஐந்து உணர்வுகள் (செயலில் ஐந்து, பார்வையில் ஐந்து) (3) மனது (4)புத்தி (5)அஹங்காரம், பிரம்மஞானம் அல்லது ஆத்மானுபூதி என்னும் வழியானது கத்தி முனையில் நடப்பதனை நிகர்த்த கடினமானதாகும்.

இந்தப் பொருளினைப் பற்றி ஸாயிபாபா நீண்ட போதனை உரை ஒன்று நிகழ்த்தினார்.

பிரம்மஞானம் அல்லது ஆத்மனுபூதியைப் பெறுவதற்கு வேண்டிய முன்னீட்டான வரையறைகள் (தகுதிகள்)

எல்லோரும் தத்தமது வாழ்நாளிலேயே பிரமத்தைப் பார்க்கவோ, தெளிவாக உணரவோ மாட்டார்கள். சிலதகுதிகள் முழுமையுமாகத் தேவைப்படுகின்றன. 1. **முமுக்ஷை** அல்லது விடுதலையுடைய செறிந்த விருப்பம். தா கட்டுப்பட்டிருப்பதாக நினைத்து தளைகளினின்று தான் விடுபட வேண்டும் என்ற அந்த இலட்சியத்துக்கே ஊக்கத்துடனும் தீர்மானத்துடனும் உழைப்பவன்.

(ஞானத்தை தேடுவோம்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 646

### மேலிருந்து கீழ்

1- தேனிசைப்பா தரும் புலவன்.
2-சுதந்திர இந்தியாவின் தந்தை.
3-போதை தருவது.
4-வள்ளுவரின் சகோதரர்.
5-கூட்டல் குறி.
6-திவ்விய சித்தம் என்று சீட்டுப் போட்டுப் பார்ப்பதை இப்படிக் கூறுவர்.
8-நல்ல.
11-பெண்.
12-மடல்.
13-பக்கத்து வீட்டுக்காரன்.
15-நல்லை நகர் தந்த பெருமான்.
17- முனிவர்.
20-உடனிருப்பவன்.
21-முல்லைக் கொடி படர தேரீந்த வள்ளல்.
23-ஒரு தானிய வகை.

### இடமிருந்து வலம்

1-இந்துக்களின் புனித தினமொன்று.
5-மனைவி.
7-ஒருவகைப் பேரிகை.
8-அகலுமாறு கூறல்.
9-மன்மதன் மனம் கவர்ந்த அழகி.
10-சீதை புத்திரன்.
12-திருமணமாகாப் பெண்.
13-ஒன்றை அளவெடுக்கும் படி உத்தரவிடல்.
14-சிறிய நேர அளவீடு.
16-துணிச்சல்.
18-அழித்தல்.
19-பலவல்ல.
20-சிறுநீர் .
22-வாழ்.
24-கருமேகம்.
25.தாயின் மூத்த சகோதரி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | ■ | |
| | ■ | 12 | | | ■ | 13 | |
| 14 | 15 | | ■ | 16 | 17 | | |
| ■ | 18 | | | ■ | 19 | | ■ |
| 20 | | | ■ | 21 | ■ | 22 | 23 |
| 24 | | ■ | 25 | | | | |

அனுப்புபவர் பெயர்:-----------------------------------
விலாசம்:-----------------------------------------
-----------------------------------------------
கையொப்பம்:-----------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 646

■ சொற்சிலம்பம் போட்டி 646க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் முறையே டிசெம்பர் 03ஆம் மற்றும் டிசெம்பர் 10ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 643இல் பரிசு பெற்றோர்

1 செ.சுவர்ணலதா, சாமியன் அரசடி, யூனியன் லேன், கரவெட்டி மத்தி, கரவெட்டி.

2 செல்வி. சு. மங்களேஸ்வரி, ஆனந்தன் வீதி, மானிப்பாய்.

3 செ. தவலிங்கம், 'தசபவனம்', சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**க.தில்லையம்பலம்,** விஜயவாசா, வதிரி, கரவெட்டி.

**எஸ். கே. குணபாலன்,** அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

**செல்வி. சி.எழிலோவியம்,** ஆக் வீதி, உடுவில், சுன்னாகம்.

**கு.அட்சரன்,** யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**இ.லூர்த்துநாயகி,** இல:85/4, கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 644இன் விடைகள்


**மேலிருந்து கீழ்**

1.அசம்பாவிதம்
2.வரி
3.காதகன்
4.சல்லி
5.அகம்பாவம்
6.வால்
8.பணம்
10.யாசனை
12.கண்ணி
14.திரை
16.நல்லவை
19.தகடு
20.நான்கு
22.நாடு

**இடமிருந்து வலம்**

1. அவகாசம்
5. அவா
7.சரிதல்
8.பகல்
9.கலியாணம்
11.பாகன்
13.சம்பாதி
15.விண்
16.நனை
17.வரை
18.தணிதல்
20.நாம்
21.கலவன்
23.குடுவை
24.குண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாகசம் - 05

# சாவுக்குள் வாழ்ந்தவன்

- சமரன்

போராளிகள் பக்கம் இழப்பைக் குறைத்து எதிரிகள் தரப்பில் அதிக சேதத்தை உண்டு பண்ணக் கூடிய வெவ்வேறான தாக்குதல் முறைகள் குறித்து புலிகள் கவனம் செலுத்திய காலம். இதன் போது தான் வெடி மருந்தை வீதியில் புதைத்து வைத்து படையினரின் வாகனங்கள் வரும் போது அந்த வெடிமருந்துக்கு மின்சார இணைப்பைக் கொடுப்பதன் மூலம் வெடிக்க வைக்கும் பொறிமுறையை புலிகள் ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். போதிய பயிற்சிகள் இல்லை. வெடிமருந்து பற்றிய ஆழமான அறிவு இல்லை. போர்க்கள அனுபவங்களும் வெகுவாகக் குறைவு. எனவே ஒவ்வொரு தாக்குதலில் இருந்துமே புலிகள் தமக்கான போர்க்களஅறிவையும்.ஆயுதக் கையாளல் அனுபுவத்தையும். உத்திகளையும் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது.

இந்த நிலையில் தான் காரைநகரிலிருந்து பொன்னாலைப் பாலத்தினூடாகத் தினமும் வந்து செல்கின்ற கடற்படை வாகனத்தை கண்ணிவெடி மூலம் தகர்க்க புலிகள் முடிவு செய்தார்கள். முடிவெடுத்து விட்டார்களே தவிர அதனை செய்து முடிக்கும் ஆற்றல் அப்போது அவர்களிடம் இருக்கவில்லை. என்றாலும் வரலாற்றில் இது முதல் முயற்சியாக இருக்கட்டுமே என்று தோல்வி வந்தாலும் ஏற்பதற்கு தயாராக இருந்தார்கள்.

காரைநகரிலிருந்து பொன்னாலைப் பாலத்தினூடாகத் தினமும் வந்து செல்கின்ற கடற்படை வாகனத்தை கண்ணிவெடி மூலம் தகர்க்க புலிகள் முடிவு செய்தார்கள். முடிவெடுத்து விட்டார்களே தவிர அதனை செய்து முடிக்கும் ஆற்றல் அப்போது அவர்களிடம் இருக்கவில்லை. என்றாலும் வரலாற்றில் இது முதல் முயற்சியாக இருக்கட்டுமே என்று தோல்வி வந்தாலும் ஏற்பதற்கு தயாராக இருந்தார்கள்.

பொன்னாலைப் பாலத்தில் எங்கு வெடிமருந்தைப் புதைக்க வேண்டும் என்று நாலைந்து நாள் நோட்டமிட்டு இடத்தையும் குறித்துக் கொண்டார்கள். பின்னர் இரவிரவாக தங்களுடைய இரகசியத் தளங்களில் கண்ணி வெடி தயாரிக்கும் வேலையில் இறங்கினார்கள். காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்காக சுண்ணக்கற் பாறைகளை உடைப்பதற்குப் பயன்படுத்தப்படும் டைனமற் தான் பிரதான வெடிபொருள். எஸ்லோன் பைப்பை துண்டு துண்டுகளாக வெட்டி அதற்குள் டைனமற்றை திணித்து விட்டால் கண்ணிவெடி தயார்.

இனி கண்ணிவெடியை வெடிக்கச் செய்வதற்கு மின்சாரம் வேண்டும். பற்றரி மூலம் மின்னிணைப்பை கொடுக்கலாம் என்ற தொழினுட்ப அறிவு அப்போது இருக்கவில்லை. எனவே ஜெனரேட்டர் ஒன்றின் மூலமே கண்ணிவெடிகளுக்கு மின் கொடுப்பது என்று முடிவாயிற்று. நாலைந்து கடைகள் தேடித்திரிந்து ஒரு கடையில் ஜெனரேட்டரை வாடகைக்கு தர ஒப்புக் கொண்டார்கள். பிறந்த நாள் கொண்டாட்டம் என்று சொல்லி அப்பையா அண்ணை தான் (புலிகளின் மூத்த உறுப்பினர்) வாடகைக்கு எடுத்தார். ஏற்கனவே கடைக்காரருக்கு அப்பையா அண்ணையைத் தெரியும். எனவே அவரது பெயரிலேயே அவன் வாடகைக்கான பற்றுச் சீட்டையும் போட்டு விட்டான் . அந்தப் பற்றுச் சீட்டுத் தான் பின்னர் தடயப் பொருளாக மாறப் போவதை அப்பையா அண்ணை அப்போது அறிந்திருக்கவில்லை. பொன்னாலை கடலுக்குள் திட்டுத் திட்டாக ஆங்காங்கே இருக்கும் மணற்பிட்டி ஒன்றின் பற்றைக்குள் புலிகள் மறைந்து கொண்டார்கள்.



முதல் நாள் இரவே பாலத்துக்கு அடியில் டைனமற் நிரப்பப்பட்ட பைப்புகள் புதைக்கப்பட்டு விட்டன. அவற்றுக்கு மின் கொடுப்பதற்கான வயர் கடலுக்கால் விடப்பட்டு மணற்பிட்டிய்யில் மறைக்கப்பட்ட ஜெனரேட்டரோடு தொடுக்கப்பட்டிருந்தது. கடற்படையின் வாகனம் வரும் போது ஜெனரேட்டர் இயக்கப்படும். கண்ணிவெடியில் மின் பாய்ந்து வெடித்துச் சிதறும். வாகனத்தில் இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படும். இது தான் திட்டம்.

ஆனால் தாக்குதலுக்கு வந்த புலிகளிடம் இருந்ததோ ஒரே ஒரு ஜி-3 துப்பாக்கி தான். ஆனாலும் அதை இயக்கப் போவது சங்கர் என்பதால் போராளிகள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏனென்றால் சங்கர் நூறு போராளிகளுக்குச் சமமானவன். அவன் கையில் இருக்கும் துப்பாக்கியும் நூறு துப்பாக்கிகளின் வேலையைச் செய்து முடித்து விடும். எனவே சங்கரின் கையிலிருந்த ஜி-3யின் பாதுகாப்போடு தான் அவர்கள் மணல்மேட்டில் காத்திருந்தார்கள்.

பாலத்தில் விசிலடித்துக் கொண்டு வந்தது கடற்படையின் வாகனம்.கண்ணி வெடியை அது நெருங்க இன்னும் சில மீற்றர் தூரம் தான். எனவே அப்பையாண்ணை பதற்றத்தோடு ஜெனரேட்டரை இயக்கத் தொடங்கினார். ஆனால் முன்பின் அனுபவம் இல்லாததால் ஜெனரேட்டர் இயங்கத் தொடங்கிய மறு கணமே மின்சாரம் அதே வேகத்தில் டைனமற் பைப்புகளுக்குள் பாய்ந்தது.

அவ்வளவு தான்.

பேரோசை.கரும்புகை.

கடற்படை வாகனம் இலக்கை அடையும் முன்னரே கண்ணிவெடி வெடித்திருந்தது. என்ன நடக்கிறது என்று கடற்படையினருக்குப் புரியவில்லை. செய்வதறியாது வாகனத்தில் அப்படியே இருந்தார்கள். இந்தத் திகைப்பு புலிகளுக்குச் சாதகமாகிப் போனது.

திட்டம் பிசகி விட்டது. ஆனாலும் தாக்குதலுக்கு வந்தவர்களைப் பத்திரமாகக் கொண்டு சேர்க்க சங்கர் முடிவெடுத்தான். ஜி-3யோடு மணல் மேட்டிலிருந்து வெளிப்பட்டான். அவன் பாதுகாப்புக் கொடுக்க ஏனைய போராளிகள் தப்புத் தண்ணீருக்கால் பாய்ந்து சென்று தாம் வந்த வூகனத்தில் ஏறத் தொடங்கினர். தண்ணீருக்கால் அந்த அவசரத்தில் ஜெனரேட்டரைக் கொண்டு வர இயலவில்லை. அப்படியே போட்டு விட்டு எல்லோரும் வாகனத்தில் ஏறும் வரை எதிரியை நோக்கி தன்னுடைய ஜி-3யை நீட்டியபடியே இருந்தான் சங்கர்.

சங்கரின் துணிச்சலைக் கண்டோ அல்லது வெடியோசையின் ஏக்கத்திலோ என்னவோ தமக்கு முன்னால் தப்பிச் செல்லும் போராளி களைக் கடற்படையினர் தடுக்கவில்லை. என்றாலும் கைவிட்டு வந்த ஜெனரேட்டரை வைத்து பின்நாள்களில் அப்பையா அண்ணையை இராணுவம் தேடியது வேறு கதை.

தன் உயிர் போனாலும் பராவாயில்லை. தோழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று ஒற்றைத் துப்பாக்கியோடு எதிரியை சந்திக்கத் துணிந்தவன் தான் சங்கர். அவன் தந்த துணிச்சலால் தான் அன்றைக்கு அத்தனை போராளிகளும் சிறு உரசல் காயம் கூட இன்றி தப்பித்து வர முடிந்தது.

(சாகசம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த கத்தி

மென்மையான நாயகன் என்ற அடையாளத்தை அடித்து நொருக்க இன்னொரு வித்தியாசமான பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் நடிகர் ஜீவா. அறிமுக இயக்குநர் ராம்நாத் இயக்கவிருக்கும் இந்தப் படத்தில் ஜீவாவுக்கு ஜோடியாக நடிக்க இருப்பவர் நயன்தாரா. இதில் குப்பத்து இளைஞனாக நடிக்கும் ஜீவா, இதற்காகத் தன்னுடைய தோற்றத்தையும் மாற்ற இருக்கிறார். அதிரடியான கதையைக் கொண்ட இந்தப்படம் சமூக நோக்குக் கொண்ட கருத்தையும் சொல்லவுள்ளதாம். அப்படியென்றால் இது இன்னொரு கத்தியா? தொடர்ந்து படிப்படியாக முன்னேறி முன்னணி இசையமைப்பாளராக உயர்ந்தார். சமீபத்தில் தனது 100ஆவது படமான பிரியாணி படத்துக்கு இசையமைத்தார்.

யுவன் கடந்த 2005ஆம் ஆண்டு லண்டனைச் சேர்ந்த பாடகி சுஜாயாவை காதலித்து மணந்து கொண்டார். ஆனால் இவர்களது திருமணம் மூன்று ஆண்டுகள் தான் நீடித்தது. 2008இல் விவாகரத்துப் பெற்று இருவரும் பிரிந்தனர். இதனையடுத்து 2011ஆம் ஆண்டு ஷில்பா என்பவரை திருமணம் செய்து கொண் டார். அந்தத் திருமணமும் நீடிக்கவில்லை. இதனை யடுத்து இஸ்லாம் மதத்துக்கு மாறியிருந்த யுவன், முஸ்லிம் பெண் ஒருவரை மூன்றாவதாக மணம் முடிக்க உள்ளார்.




# அண்ணன் தம்பிக்கு பேய்

தமிழ் சினிமாவின் வெற்றிச் சகோதரர்கள் என்றால் அது சூர்யா-கார்த்தி தான். ஆனால், சில காலமாக இவர்களது படங்கள் முன்பு போல் வெற்றி பெறுவது இல்லை. மெட்ராஸ் படம் கார்த்திக்கு சுமாரான வெற்றியைத் தந்தது. ஆனால் சூர்யாவின் அஞ்சான் பற்றி எவரும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தநிலையில் சூர்யா அடுத்து மாஸ் படத்திலும், கார்த்தி காஷ்மோரா என்ற படத்திலும் நடிக்கவுள்ளனர்.

இந்த இரண்டு படங்களும் பேய் சம்பந்தப்பட்ட கதை தான் என்று நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஒரே நேரத்தில் அண்ணனும், தம்பியும் பேய்க்கதையில் நடிப்பது ஒற்றுமையோ தெரியவில்லை.



# களமிறங்கிய கமல்

தமிழ் சினிமாவின் கௌரவம், இந்திய திரையுலகின் அடையாளம் பத்மஸ்ரீ கமல்ஹாசனின் பிறந்தநாள் கடந்த 7 ஆம் திகதி. சில நாள்களுக்கு முன் இந்தியப்பிரதமர் மோடி தூய்மை இந்தியா என்ற திட்டத்தின் கீழ் இந்தியாவின் முக்கிய பிரபலங்களுக்கு அழைப்பு விடுத்தார். இதில் கமல்ஹாசனும் ஒருவர். அவர் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, தாம்பரத்தில் உள்ள ஏரி ஒன்றை சுத்தம் செய்யும் முயற்சியில் அவர் இறங்கினார். கமல்ஹாசன் மக்களோடு மக்களாக ஏரியில் இறங்கி சுத்தம் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக்கட்டு விரைவில்

ஹிந்திப்படவுலக நடிகை அனுஷ்கா சர்மாவும் இந்தியக் கிரிக்கெட் வீரர் கோஹ்லியும் காதலர்களாக ஜோடி போட்டுக்கொண்டு ஊர் ஊராகச் சுற்றுகின்றனர். இதனால் இவர்கள் இருவரையும் பின் தொடரும் ஊடகவியலாளர்கள் இந்தக் காதல் ஜோடியின் அந்தரங்க விடயங்களையெல்லாம் சுடச்சுடப் புகைப்படங்கள் மூலம் வெளிப்படுத்தி வருகிறார்கள். இது கோஹ்லியின் பெற்றோருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளதாம். எனவே இப்படி தங்கள் மகனைப் பற்றிய அந்தரங்க விடயங்கள் வெளியாவதைத் தடுக்க காதலர்களை தம்பதிகளாக்க முடிவெடுத்துள்ளார்கள். இந்த நிலையில்அனுஷ்காவுக்கும் கோஹ்லிக்கும் நிச்சயதார்த்தம் நடத்த அவர்களின் பெற்றோர்கள் அண்மையில் சந்தித்துப் பேசியதாகத் தகவல்.



# இந்த வழி நல்ல வழி

புதுமுக நடிகர்களின் படங்கள் கூட படப்பிடிப்புக்காக வருடக்கணக்கில் இழுத்தடிக்கும் சூழலில், சுப்பர் ஸ்ரார் ரஜினி லிங்காவையும் உலகநாயகன் கமல் 'பாபநாசம் படத்தையும் சில மாதங்களில் நடித்து முடித்துக் கொடுத்திருக்கின்றனர். இதனால் தயாரிப்புச் செலவு பாதியாகக் குறைந்துள்ளதாம். எனவே படம் ஒரு வாரம் ஓடினால் கூட போட்ட பணத்தை எடுத்துவிட முடியும் என்று தயாரிப்பாளர் தரப்புச் சொல்கிறது. இந்த இரண்டு உச்ச நட்சத்திரங்களும் காட்டிய வழியை ஏனைய நடிகர்களும் பின்பற்றினால் தமிழ் சினிமா மீண்டும் ஆரோக்கியமான பாதைக்குச் செல்ல முடியுமே.



# தனுஷை விரும்பிய விஜய்

'அனேகன்' கதையை கேட்டுவிட்டு தனக்கு நேரம் இல்லாததால், தனுஷ் பெயரை பரிந்துரை செய்திருக்கிறார் இளைய தளபதி விஜய்.

தனுஷ், அமைரா, கார்த்திக் உள்ளிட்ட பலர் நடிக்கும் 'அனேகன்' படத்தை இயக்கி இருக்கிறார் கே.வி.ஆனந்த். ஏ.ஜி.எஸ் நிறுவனம் தயாரித்திருக்கும் படத்துக்கு ஹரிஸ் ஜெயராஜ் இசையமைத்து இருக்கிறார்.


'மாற்றான்' படத்துக்குப் பிறகு பல தயாரிப்பாளர்கள் கே.வி.ஆனந்திடம் விஜய்யை வைத்து படம் இயக்குமாறு வலியுறுத்தி இருக்கிறார்கள். ஆனால், முழுக்கதையும் முடிவாகாமல் படம் இயக்குவதில்லை என்பதால் 'அனேகன்' முழுக்கதையையும் 4 மாதங்களில் எழுதி முடித்திருக்கிறார் கே.வி ஆனந்த்.

படத்தின் கதை விஜய்க்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால், 'ஜில்லா' மற்றும் 'கத்தி' ஆகிய படங்களை ஒப்புக் கொண்டதால் கே.வி.ஆனந்த் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. விஜய் மற்றும் கே.வி.ஆனந்த் இருவருமே வேறு யார் நடித்தால் இந்தக்கதை நன்றாக இருக்கும் என்று பேசிக்கொண்டு இருந்திருக்கிறார்கள். அப்போது விஜய், தனுஷ் பெயரைப் பரிந்துரை செய்திருக்கிறார்.

தனுஷிடம் கதையைக் கூற, அவருக்கு பிடித்து விட்டு உடனே நாள்களை ஒதுக்க படப்பிடிப்பு தொடங்கப்பட்டு இப்போது படமும் வெளியாகத் தயாராகிவிட்டது.

# மூன்றாவது நாயகி

அஜித்குமாரின் 'என்னை அறிந்தால் படத்தில் அனுஷ்கா, த்ரிஷா இருவரும் நடிப்பது தெரிந்த விஷயம்தான். மூன்றாவது நாயகியாக மலையாளம், கன்னடப் பட கதாநாயகி பார்வதி நாயர் நடித்துள்ளார். தமிழில் இதற்கு முன் 'நிமிர்ந்து நில் படத்தில் சிறு வேடத்தில் நடித்தவர், கமலின் 'உத்தம வில்லன் படத்திலும் மூன்றாவது நாயகியாக நடித்துள்ளார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் உயர்வான மலைகள்

உலகில் மிக உயர்வான மலை எது என்று கேட்டால், தயக்கமின்றி எவரெஸ்ட் என்று சொல்வோம். ஆனால், c é þ Highest) மலை என்று சொல்லப்படும் எவரெஸ்ட், உலகின் மிக உயரமான (Tallest) மலை கிடையாது. அந்தப் பெருமைக்குரியது, ஹவாய் தீவுகளில் ஒன்றான Mauna Kea என்ற தீவில் அமைந்துள்ள மலை.

பூமியின் நிலப்பரப்பிலிருந்து, அதாவது, கடல் மட்டத்திலிருந்து அளக்கும்போது, எவரெஸ்ட் மலைச் சிகரம் 8850 மீற்றர்கள் உயர்ந்து காணப்படுகிறது. ஆயினும், ஒரு மலையின் முழு உயரத்தை அதன் அடிமட்டத்திலிருந்து அளக்க வேண்டும். அவ்வாறு அளக்கும்போது, Mauna Kea மலையின் மொத்த உயரம் 10000 மீற்றர்களுக்கும் அதிகம். அதாவது, அது எவரெஸ்ட் மலையைவிட 1150 மீற்றர்களுக்கும் அதிக உயரமானது. இருப்பினும், இந்தமலையின் உயரம் கடல் மட்டத்திலிருந்து 4205 மீற்றர்களே. மீதமுள்ள 5800 மீற்றர்கள் கடலுக்கடியில் அமிழ்ந்துள்ளன.

உலகின் மிக உயர்வான (Highest) மலைகள் என்ற பட்டியலில் முதல் 100 இடங்களைப் பெற்றுள்ள மலைகள் அனைத்தும், ஆசியாவில் அமைந்துள்ளன

## எங்கே போறீங்கள்?

எலியாரே எலியாரே எங்கே
போறீர்கள்?
எலிசெபத் ராணியரைப்
பார்க்கப் போறேங்க
ஏரி கடல் குறுக்கே வந்தால்
என்ன செய்வீங்க?
ஏரோப்பிளேன் மேல ஏறி
பறந்து செல்வேங்க
பறக்கும் போது பசி எடுத்தா
என்ன செய்வீங்க?
பஜ்ஜி,வடை, பலகாரம்
வாங்கித் தின்பேங்க




## கிளிப் கதை



"துறவி ஒருவர் நஸீமுக்கு அழகான கிளி ஒன்றைப் பரிசாக அளித்தார். அதை மிகவும் மகிழ்ச்சியோடு பெற்றுக் கொண்ட நஸீம் நன்றியுள்ள வேலையாள் ஒருவனிடம் கிளியைக் கொடுத்து மிகவும் கவனத்தோடு அதற்குத் தேவையான ஆகாரத்தைக் கொடுத்து வளர்த்து வர வேண்டும். கிளி நோய்வாய்ப் பட்டிருக்கி றது என்றோ, அல்லது செத்து விட்டது என்றோ என்னிடம் வந்து சொன்னால் உனக்கு மரணதண்டனை அளிப்பேன்"என்று கட்டளை யிட்டார்.

கிளியை ஏற்றுக்கொண்ட வேலையாள் தினமும் அதைக் கவ னத்தோடு வளர்த்தான். சில மாதங்களுக்குப் பிறகு கிளி நோய் வாய்ப்பட்டு மாண்டுவிட்டது. கிளி இறந்த செய்தி அரசனுக்கு எட்டினால் மரணதண்டனை அல்லவா கிடைக்கும். என்ன செய்வது என்று வேலையாள் நடுங்கிக் கொண்டிருந்தான். சொன்னாலும் தண்டனை. சொல்லாமல் இருந்துவிட்டாலும் தண்டனை கிடைக்கத் தான் செய்யும். இந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்பிக்க வழி என்ன?

மதியூக மந்திரி பீர்பாலிடம் ஓடி, அவர் காலில் விழுந்து வணங்கி, நடந்ததைக் கூறினான் நஸீம். "பயப்படாதே நான் காப்பாற்று கிறேன்" என ஆறுதல் கூறி அவனை அனுப்பி வைத்தார் மந்திரி பீர்பால். மறுதினம் வழக்கம் போல் சபைக்குச் சென்ற பீர்பால் அரசரை வணங்கிவிட்டு

பெருமானே "உங்கள் கிளி..." வார்த்தையை முடிக்கவில்லை பீர்பால். "என் கிளிக்கு என்ன நேர்ந்தது? என் கிளி செத்து விட்டதா?" எனப் படபடப்போடு கேட்டார் அரசர். மன்னர் பெருமானே! கிளி பெரிய துறவியைப் போலாகி விட்டது. முகம் வானத்தை நோக்கியுள்ளது. கண்கள் மூடிக் கொண்டிருக் கின்றன!" என்றார் பீர்பால்.

உடனே விரைந்து சென்று பார்த்தார் நஸீம். கிளி கூண்டுக்குள் செத்துக்கிடந்தது. "கிளி செத்துவிட்டது" என்று ஏன் முன்பே சொல்லி இருக்கக் கூடாது ?"

அது எப்படிச்சொல்ல முடியும்? நீங்கள் விரும்பினால் அவ்வாறு சொல்லாம். ஆனால் அது பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறது என்றே நான் கருதுகிறேன்" என்றார் பீர்பால்.

ஜனங்கள் உம்மை புத்திசாலி என்று சொல்லிக் கொண்டிருக்கி றார்கள். ஒரு கிளி உயிரோடு இருக்கிறதா? செத்து விட்டதா? என்பதைக் கூட உம்மால் அறிந்து கொள்ள முடியவில்லையே, கிளி இறந்து விட்டது என்ற முன்னரே நீர் சொல்லியிருந்தால் , நான் இவ் வளவு சிரமத்தோடு இங்கே வந்திருக்க வேண்டியதில்லை அல்லவா? என்றார் நஸீம்.

அது எப்படி சொல்ல முடியும்?அரசர் பெருமானே, கிளி செத்து விட்டது என்று முன்னரே சொல்லி இருந்தால் என் தலையை அப்பொழுதே கொய்து இருக்க மாட்டீர்களா?" என்றார்.

அதைக்கேட்ட நஸீம் வேலையாளியிடம் தாம் முன்பு கூறியி ருந்ததை நினைவு கூர்ந்தார். நல்லவேளையாக நன்றியுள்ள அந்த வேலையாளின் தலை வெட்டப்படுவதிலிருந்து தந்திரமாக காப்பாற்றிய பீர்பாலின் மதியூகத்தைப் புகழ்ந்தார்.

## விந்தைத் தகவல்கள்



■ உங்களுக்கு தாகம் எடுக்கவில்லையானால் நீங்கள் அதிகம் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏனென்றால், ஏதோ ஒரு காரணத்தால் நம் உடலில் உள்ள நீர் சத்து முற்றிலும் தீர்ந்து விடுமானால் தாகம் எடுக்கும் செயல்பாடு நிறுத்தப்பட்டு விடுகிறது

■ சுவிங்கத்தை மென்று கொண்டே வெங்காயத்தை உரித்தால், கண்ணில் நீர் வராது.

■ உங்கள் நாக்கு இளஞ்சிவப்பு நிறத்தில் இருந்தால் மட்டுமே உங்கள் நாக்கில் கிருமிகள் இல்லையென்று பொருள் அன்றி வெண்மையாக இருப்பின் வெண்படலமாக பாக்டீரியா படர்ந்து இருக்கிறது என்று பொருள்.


■ SOS என்ற வானொலி அலை முதல் முதலாக டைட்டானிக் கப்பலில் பயன்படுத்தப்பட்டது


■ ஆச்சரியமான விஷயங்களை பார்க்கும் போது மனிதனுடைய கண்கள் 45 சதவீதம் வரை விரிவடைகின்றன.

■ குகையை விட்டு வெளியேறும் வெளவால்கள் எப்பொழுதும் இடது பக்கமாகவே திரும்புகின்றன.

## கண்டுபிடியுங்கள்

இந்த இரு படங்களுக்குமி டையே 05 வித்தியாசங்கள் உள்ளன.





## கடி ஜோக்ஸ்



கபில்;-நான் தினமும் அப்பிள், தோடம்பழ ஜீஸ் போன்றவற்றை . பருகியதால் தான் என் உடம்பு குறைந்தது.

தபில்; - அவற்றின் விலையைக் கேட்ட உடனேயே எனக்கு உடம்பு குறைச்சிடுச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுயநலவாதிகள்

எங்குநோக்கினும் சுயநல வாதிகள்.
எங்கு கேட்டினும் பொய்கள், புரட்டுக்கள்.
எங்கு சென்றிடினும் நம்பிக்கைத் துரோகிகள்.
நம் வெற்றியைக் கண்டு
உளம் மகிழ யாருமில்லை என்றாலும்
நம் தோல்வியைக் கொண்டாட
பெரும் கூட்டமே இங்கு காத்திருக்கிறது
சற்றுத் தடுமாறினாலும்,
நம்மை உயிரோடு விழுங்க
அது தூங்காமல் விழித்திருக்கிறது.

காலம் கனியும்
எனக் காத்திருத்தலும் பயனுக்கில்லை.
வாழ் அல்லது வாழவிடு
என்ற அறசீற்றமும் பிரயோஜனமில்லை.
உனக்கு இருக்கும் ஒரே வழி,
செய் அல்லது செத்து மடி..

-பிரவீன் குமார்

# கவிதைப்புனல்

## மண்ணோடு மண்ணாகி...

சிலரது
பாரபட்சத்தால்
பாராமுகத்தால்
மனசாட்சியை
கொன்று போட்டு விட்ட
இனக்குரோதத்தால்
ஒரு சமூகத்தால்
ஒரு சமூகத்தின்
அப்பாவி வாரிசுகள்
கண்முன்னாலேயே
புதையுண்டு
போயிருக்கிறார்கள்!

இயற்கையின்
சீற்றத்தால்
மழை அழுதது
மண்ணும் அழுதது
மனம் அழுதது
மரம் செடிகளும்
அழுதன!
இவை மட்டுமா..?
வீடுகளும்- விலை மதிப்பற்ற
மனித உயிர்களும்
அழுது அழுது
அடங்கிப் போயினவே...?

உழைத்தது போதுமென்று
ஓய்வைத் தேடிய
உழைப்பாளர்கள்
களைத்து விட்ட
கடைசிக் காலத்தில்
நிம்மதியைத் தேடிய
முதியோர்கள்
இளசுகள்
இளம் பிஞ்சுகள்
எல்லாமே, ஒரு கணத்தில்
மண்ணோடு மண்ணாக
புதைந்து போயினரோ?

-நா.ஜெயபாலன்,
பிபிலை.



## வெளிச்சம்

கறி காய்ச்சி தாழித்து
முடித்த பின்னும்
எதற்காக
இந்த அடுப்பெரிப்பு
புரியவில்லை
விரதகாரனோ
முடியவில்லை
என்கின்றான்
எல்லாம் அந்தக்
கடவுளுக்கே
வெளிச்சம்

-வேல்நந்தன், புலோலியூர்

எ ாலும் முடியும்...
சில ச ம்
நினைப்பதுண்டு...
பிறந்தது ஏன் என்று?
வாழ்வது வீண் என்று...

சில சமயம்
நினைப்பதுண்டு...
இதை முடித்தது
நானா என்று...


சில சமயம்
நினைப்பதுண்டு...
இருப்பது எதற்காக என்று?
துடிப்பது எதனால் என்று...

சில சமயம்
நினைப்பதுண்டு...
உன்னால் முடியுமென்று...
உண்மையில், நான்
அறிவுப்பெட்டகமுமில்லை...
அழுகிய முட்டையுமில்லை...

அறிவைத் தேடிய
என் பயணத்தில்
அனுபவமே படிக்கட்டுகள்....

வாழ்க்கைப் பாதையே
என் வழித்தடங்கள் ....

-சங்கீதா செந்தில்



## உளியின் ஓசை

வலி தாங்கிய
கற்களெல்லாம்
சிலையாவதில்லை!
சிலையான
தெய்வங்களெல்லாம்
போற்றப்படுவதுமில்லை!
தத்துவம் பேசுது உளி!

-ஜெயந்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலையறுப்பது தர்மமில்லை

- சிராஜுல் ஹஸன்

ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும் அன்பின் மார்க்கமான இஸ்லாமுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

இஸ்லாமிய தேசம் என்று சொல்லப்படும் ஐ.எஸ். பயங்கர வாதிகள், அநீதிகளை எதிர்த்துப் போராடுகிறார்களோ இல்லையோ, வெளிநாட்டினரின் தலைகளைத் துண்டிப்பதில்தான் பெரும் ஆர்வத்துடன் இருக்கிறார் கள். சிரியாவில் உள்நாட்டுப் போர்ச் செய்திகளைத் திரட்ட வந்த அமெரிக்க நிருபர்கள் ஜேம்ஸ் ஃபோலே, ஸ்டீவன் சாட்லாஃப்ட், பிரிட்டன் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த டேவிட் ஹெயின்ஸ், அலன் ஹென்னிஸ்கின் முதலானோரை ஐ.எஸ். பயங்கர வாதிகள் கழுத்தைத் துண்டித்துக் கொலை செய்தனர். பிணைக் கைதிகளுக்கு மட்டுமல்ல, எதிர்ப்பாளர்கள் மாற்று இனத்தவர்கள் போன்றவர்களுக்கும் மரணம்தான் தண்டனை.

கடவுளின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாகவும், கடவுளின் ஆட்சியை நிலைநாட்டவே போராடுவதாகவும் சொல்லிக் கொள்ளும் இந்த ஐ.எஸ். பயங்கர வாதிகள், ஒவ்வொரு முறையும் பிணைக் கைதிகளின் தலையைத் துண்டிக்கும்போதும், துண்டிக்கப்பட்டுத் தரையில் வீழ்வது மனிதர்களின் தலைகள் அல்ல, மகத்தான ஒரு மார்க்கத்தின் மானமும் மரியாதையும்தான்.



**கடவுளின் மார்க்கத்தைப் பின்பற்றுவதாகவும், கடவுளின் ஆட்சியை நிலைநாட்டவே போராடுவதாகவும் சொல்லிக்கொள்ளும் இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள், ஒவ்வொரு முறையும் பிணைக் கைதிகளின் தலையைத் துண்டிக்கும்போதும், துண்டிக்கப்பட்டுத் தரையில் வீழ்வது மனிதர்களின் தலைகள் அல்ல, மகத்தான ஒரு மார்க்கத்தின் மானமும் மரியாதையும்தான்.**

### உண்மையான இஸ்லாம் எது?

வாழ்வின் எல்லாத் துறைகளுக்கும் வழிகாட்டியுள்ள ஓர் அருள் நெறிதான் இஸ்லாம். பலரும் கருதுவதுபோல் இஸ்லாம் என்றாலே ஜிஹாதும் பலதார மணமும் தலாக்கும் தான் என்பது உண்மையல்ல. பிறப்பிலிருந்து இறப்பு வரை, மனிதர்களுக்குத் தேவையான எல்லா வழிகாட்டுதல்களையும் குறைவின்றி நிறைவாக வழங்கியுள்ளது இஸ்லாம். இந்த உன்னதமான வழிகாட்டுதலில் போர்களும் அடங்கும். போர்க்களத்தில் பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்குறித்து இஸ்லாம் நிறையப் பேசியுள்ளது. குழந்தைகள், பெண்கள், முதியோர்கள், துறவிகள் ஆகியோரைக் கொல்லக் கூடாது; வயல் நிலங்களைப் பாழ்படுத்தவோ தீயிடவோ கூடாது; மரங்கள் போன்ற தாவரங்களுக்கு ஊறு விளைவிக்கக் கூடாது; கால்நடைகளைக் கொள்ளையிடக் கூடாது; போர்க்களத்தில் இறந்த எதிரிகளின் உடல்களைச் சிதைக்கக் கூடாது; பிடிபட்ட கைதிகளைத் துன்புறுத்தக் கூடாது என்றெல்லாம் குர்ஆனிலும் நபிமொழிகளிலும் நிறைய வழிகாட்டுதல்கள் உள்ளன. ஒரே ஒரு எடுத்துக்காட்டைப் பார்ப்போம்.

### பாதுகாப்பாகச் சேர்த்துவிடுங்கள்

எதிரிகளுடன் கடுமையான போர் நடந்துகொண்டிருந்த ஒரு சூழலில், எதிரிப் படையைச் சேர்ந்த ஒருவர் இறைமார்க்கத்தை அறிந்துகொள்ளும் நோக்கத்தில் முஸ்லிம் இராணுவத்தினரிடம் வந்தால், அவரிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? இதோ, குர்ஆன் கூறுகிறது: இணை வைப்பாளர்களில் எவரேனும் அடைக்கலம் கோரி உங்களிடம் (இறைவனின் வேதத்தைச் செவி யுறுவதற்காக) வந்தால் அப்போது இறைவனின் வேதத்தை அவர் செவியுறும் வரையில் அவருக்கு அடைக்கலம் அளியுங்கள். பிறகு, அவரை அவருடைய பாதுகாப்பிடத்தில் சேர்த்துவிடுங்கள். (குர்ஆன் 9:6) இந்த வசனத்தின் இறுதிப் பகுதி அடிக்கோடிட்டுக் கவனிக்க வேண்டியதாகும்: பிறகு, அவரை அவருடைய பாதுகாப்பான இடத்தில் சேர்த்துவிடுங்கள். அதாவது, அவர் தமக்குப் பாதுகாப்பான இடம் என்று எந்த இடத்தைக் கருதுகிறாரோ அந்த இடம் வரை அவரைப் பாதுகாப்பாகக் கொண்டுசேர்த்துவிட வேண்டும்.

இதுதான் இஸ்லாமே தவிர, கிடைத்தாண்டா எதிரி என்று தலையை வெட்டுவது ஒருபோதும் இறைமார்க்கம் ஆகாது.

### பிணைக் கைதிகளை எப்படித் தண்டிப்பது?

பிணைக் கைதிகள் விஷயத்தில் நபிகள் நாயகம்(ஸல்) எவ்வாறு நடந்துகொண்டார் என்பதையும் இந்த இடத்தில் அறிந்துகொள்வது மிகவும் பயன்தரும். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் நடைபெற்ற பத்ருப் போர் இஸ்லாமிய வரலாற்றில் குறிப்பிடத் தக்க ஒன்றாகும். மதீனாவில் நபிகளாரின் தலைமையில் ஓர் இஸ்லாமிய அரசு உருவாகிக்கொண்டிருந்தது. அந்த அரசை முளையிலேயே கிள்ளியெறிய மக்காவிலிருந்து குறைஷிகள் படை திரட்டிக்கொண்டு வந்தார்கள். அந்தப் போரில் முஸ்லிம் வீரர்களின் மொத்த எண்ணிக்கையே முந்நூற்றுச் சொச்சம்தாம். இந்த வீரர்களும் பெரும்பாலும் ஏழைகள், வறியவர்கள். போதிய ஆயுதங்களோ தளபாடங்களோ இல்லாதவர்கள்.

ஆனால், மக்காவிலிருந்து படையெடுத்து வந்த வர்களோ ஆயிரத்துக்கும்மேல். எல்லோரும் முழு ஆயுதபாணிகளாக, குதிரைகள், ஒட்டகங்கள், அம்பு, வில், ஈட்டி என்று அனைத்துப் போர்த் தயாரிப்புகளுடனும் வந்திருந்தனர்.

போர் மூண்டது. இஸ்லாத்துக்கு வாழ்வா, சாவா என்ற போராட்டம். நபிகளார் செய்த ஒரு பிரார்த்தனையிலிருந்து போரின் தீவிரத்தை நாம் புரிந்துகொள்ளலாம்: இறைவா, இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு நீ தோல்வியை அளித்தால், பிறகு உலகில் அல்லாஹ் என்று உன் பெயரை உச்சரிப்பதற்குக்கூட யாரும் இருக்க மாட்டார்கள் போரில் நபிகளார் வெற்றிபெற்றார்.

இதில் முக்கியமான செய்தி, எதிரிப் படையைச் சேர்ந்த 70 பேர் பிணைக் கைதிகளாகப் பிடிபட்டனர். இந்த இடத்தில்தான், இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் வரலாற்றை ஆழ்ந்து படிக்க வேண்டும். பத்ருப் போரில் பிணைக் கைதிகளாய்ப் பிடிபட்ட 70 பேரையும் என்ன செய்வது என்ற கேள்வி எழுந்தது. பலதரப்பட்ட யோசனைகளுக்கும் விவாதங்களுக்கும் பிறகு, நபிகளார் ஒரு தீர்மானத்துக்கு வந்தார். அது என்ன தீர்மானம்? 70 பேரின் தலைகளையும் துண்டித்து எறிந்துவிட வேண்டும் என்றா?

அதுதான் இல்லை. பிணைக் கைதிகளில் யாருக்கு எழுதப் படிக்கத் தெரியுமோ அவர்கள் ஒவ்வொருவரும் பத்து முஸ்லிம் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்; எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் உரிய இழப்பீட்டுத் தொகையைச் செலுத்திவிட்டு விடுதலை ஆகலாம் என்று அறிவித்தார். அவ்வாறுதான் நடந்தது. பிணைக் கைதிகள் முஸ்லிம் பிள்ளைகளுக்கு எழுதவும் படிக்கவும் கற்பித்துவிட்டு விடுதலை பெற்று ஊர் திரும்பினார்கள், இஸ்லாத்தையும் நபிகளாரின் அருஞ்செயலையும் புகழ்ந்தபடியே.

இதுதான் இறைதூதரின் வழிமுறை. இதுதான் இஸ்லாமிய நடைமுறை. இன்றைக்கும்கூட இந்த வழி முறை பின்பற்றத் தகுந்ததே.

முகமூடிக் கொள்ளையர்கள் போன்ற ஐ.எஸ். பயங்கரவாதிகளின் காட்டுமிராண்டித்தனத்துக்கும் இஸ்லாமியத் திருநெறிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்த ஐ.எஸ். பயங்கரவாதிகளிடம் நாம் சொல்ல விரும்புவது ஒன்றே ஒன்றுதான்:

அல்லாஹ்வின் மார்க்கத்தைத் தயவுசெய்து அவமானப் படுத்தாதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டில் - 26

# இரைதேடும் இணைய வலை

■ சுடுதண்ணி

அமெரிக்க உளவுத்துறை அமைப்புகளுக்கும் இணையப் போராளிகளுக்கும் இடையே யான கண்ணாமூச்சி ஆட்டத் தில் 2013ஆம் ஆண்டு மிக முக்கியமானது. 2012 மார்ச் மாதத்தில் சிகர்துர் மற்றும் சாபு மூலமாக தங்கள் வசப்பட்ட தகவல் பறிமாற்றங்கள் மற்றும் கைது நடவடிக்கைகள் மூலம் அமெரிக்காவின் கை ஓங்கியிருந்த நேரம். இந்தப் பின்னடைவின் உடனடி விளைவு 2012 ஜூன் மாதம் ஜூலியன் அசான்ஞ்சே ஈக்குவடோர் தூதரகத்தில் குடித்தனம் புகுந்தது தான்.









2013 ஜனவரியில் 26 வயதே ஆன ஆரோன் ஸ்வார்ட்ஸின் தற்கொலை. மே மாதம் எட்வர்ட் ஸ்நோடன் ஹொங்கொங்குக்கு தப்பியோட்டம், பின்னர் ஜூன் மாதம் புகழ்பெற்ற பத்திரிகையாளரான மைக்கெல் ஹேஸ்டிங் மற்றும் ஜூலையில் ஹக்கர்களின் சூப்பர் ஸ்டார் பர்னபி ஜாக் ஆகியோரின் மரணம் என இணைய வல்லுநர்களின் உலகம் திகில் திருவிழாவில் தடுமாறித் தவித்தது.

எட்வர்ட் ஸ்நோடன் அமெரிக்காவின் இணையக் கண்காணிப்புக் குறித்து வெளியிட்ட தகவல்களை நம்மில் எத்தனை பேர் ஆழ்ந்து படித்திருக்கிறோம் என்று தெரியவில்லை. அமெரிக்க வரலாற்றில் நாட்டின் பாதுகாப்புக்காக எதுவும் செய்யலாம் என்று ஆழ்ந்த மயக்கத்தில் இருந்த மக்களைத் தட்டியெழுப்பிய நிகழ்வுக்குச் சொந்தக்காரர் ஸ்நோடன். முப்பது வயதுக்குள் சி.ஐ.ஏ யில் பணிபுரிந்த அனுபவம், அமெரிக்கப் பாதுகாப்பு அமைப்பான என்.எஸ். ஏ யுக்காக ஹவாய்த் தீவில் வேலை, அழகான காதலி, அன்பான குடும்பம், 2 லட்சம் அமெரிக்க டொலர் வருடச்சம்பளம் இவையனைத்தையும் தியாகம் செய்வதற்கு ஸ்நோடன் தயாராக இருந்தது தான் அனைவரையும் வியப்பிலாழ்த்தியதற்குக் காரணம். ஸ்நோடன் கணினிகளை, வலையமைப்புகளை நிர்வகிக்கும் பணிகளைச் செய்து வந்த காரணத்தால் எத்தகைய தகவல் கோப்புக்களையும் அணுகுவதற்கும், வலையமைப்புப் பாதுகாப்பில் சிக்காமல் இருப்பதற்கும் எந்தவிதத் தடையுமில்லை.

கை நிறையப் பணம், தீவின் கடற்கரையோரத்தில் இரசனையான வாழ்க்கை இவற்றை விட, PRISM என்றழைக்கப்படும் என்.எஸ். ஏ யின் கண்காணிப்பு வலையின் தீவிரம் ஸ்நோடனை அசைத்துப் பார்த்தது. அதன் மூலம் நீங்கள் எந்த ஊரில் இருந்து மின்னஞ்சல் அனுப்பினாலும், மின்னஞ்சல் வழங்கி அமெரிக்காவில் இருந்தால் முழு மின்னஞ்சலையும் அப்படியே கண்காணிக்க முடியும். இணையத்தில் பெரும்பாலான வழங்கிகள் அமெரிக்காவில் இருந்து செயற்படும் காரணத்தாலும், உலகின் பெரும்பான்மை இணையப்போக்குவரத்து அமெரிக்க நிறுவனங்களால் கையாளப்படுவதாலும் PRISM எனும் ஒக்டோபஸ்ஸின் கரங்களுக்குள் சிக்கிய சில்வண்டுகளில் நீங்களும் நானும் கூட அடக்கம். உலகின் முக்கிய தலைவர்கள் சுமார் 122 பேர் வரை இதன் மூலம் என்.எஸ். ஏ யின் நேரடிக் கண்காணிப்பில் இருந்திருக்கிறார்கள். அதில் இந்தியப் பிரதமர் அலுவலகமும் அடக்கம். கிட்டத்தட்ட உலகின் மிகப்பெரிய கண்காணிப்புத் திட்டத்தில் என்.எஸ். ஏ யில் பணியில் இருக்கும் பாதுகாப்பு வல்லுநர்களுக்கு இதை விடப் பெரும்பேறு ஏதுமில்லை.

கண்காணிக்கும் கண்களை யாரும் கண்காணிப்பதில்லை என்பது தான் சோகம். தங்களை யாரும் கண்காணிக்கவில்லை, யாருக்கும் தாங்கள் கண்காணிப்பது தெரியவும் போவதில்லை என்ற காரணங்கள் கண்களை மறைக்க இந்த இணையக் கண்காணிப்புத் தொடாத எல்லையே இல்லை. தங்களுக்கு விருப்பமான ஆண்/ பெண் தனிநபர்களைக் கூட கண்காணித்துத் தூண்டில் போட்டு மீன் பிடிப்பது கூட நடந்திருக்கிறது . இந்த காட்டாறில் மைக்ரோசொப்ட், கூகுள் போன்ற பிரமாண்டங்கள் எல்லாம் மண்டியிட்டுக் கேளுங்கள் கொடுக்கப்படும் நிலைக்குப் போனாலும், ஸ்நோடனின் தனிப்பட்ட மின்னஞ்சல் சேவையினை வழங்கி வந்த நிறுவனமான லாவாபிட், தகவல்களை அளிக்க மறுத்து நிறுவனத்தையே மூடி விட்டு நிமிர்ந்து சென்ற சம்பவமும் நடந்தேறியது.

இத்தனையும் ஸ்நோடன் சொல்லும் வரை உலகில் யாருக்கும் தெரியாது. இவ்வாறான கண்காணிப்பு மிக அருவருப்பானது என்றும் என்.எஸ். ஏ யின் இந்தக் கண்காணிப்பு முறை கிழக்கு ஜெர்மனியின் கம்யூனிச அரசு தங்களின் பாதுகாப்பு அமைப்பான STASI மூலம் செயற்படுத்திய கண்காணிப்புத் திட்டத்தினை நினைவு படுத்துவதாக ஜெர்மனியின் முக்கிய அரசியல் பிரமுகர் ஏஞ்சலா மார்கெல் குமுறினார். STASIயின் தீவிரத்தினையும், கண்காணிப்பின் வீச்சினையும் மேலும் அறிந்து கொள்ள ஆவல் கொள்ளும் அன்பர்கள் The Lives of Others என்ற அற்புதமான திரைப்படத்தினைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். அமெரிக்க அரசு இது குறித்து மன்னிப்புக் கோரியதும், மற்ற புத்திசாலி உலக நாடுகளின் அரசு அமைப்புகள் தங்கள் சொந்த வழங்கிகளை வைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை உணர்த்தியதையும், அதிபுத்திசாலி நாடுகள் மக்களை இப்படியும் கண்காணிக்கலாமா என்று கற்றுக் கொண்டதுமே ஸ்நோடன் நமக்களித்த தகவல்கள் மூலம் நிகழ்ந்த விளைவுகள். இதற்கு ஸ்நோடன் அளித்த விலை மிக மிக அதிகம்.

(வலை விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வார இராசி பலன்

**12.11.2014 –18.11.2014**

## மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும். புத்திரர் மனதில், எதிர்கால வாழ்வின் நம்பிக்கை வளர உதவுங்கள். எதிரியால் வரும் தொந்தரவு விலகும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை பலம் பெறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு நன்மை தரும். பணியாளர்கள், தம் கடமை உணர்ந்து செயல்பட வேண்டும். பெண்கள், அதிக பயன்தராத வீட்டு உபயோகப்பொருளை வாங்க வேண்டாம். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டுதலை பின்பற்றுவது நல்லது.

## ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க கூடாது. புதிய வாகனம், வீடு வாங்க சிலருக்கு நல்யோகம் உண்டு.புத்திரர் நற்குணம், நற்செயலால் பாராட்டு பெறுவர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணையின் உடல்நலத்திற்கு, சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரம் சிறந்து, உபரி பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்றுக்கொள்வர்.

## மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

உடன் பிறந்தர்களிடம், அதிருப்தி பெறாத அளவில் நடப்பது நல்லது. வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். ஊட்டம் தரும் உணவு, சீரான ஓய்வு உடல்நலம் பாதுகாக்கும். இல்லறத்துணையின் கரிசனம் மிகுந்த செயல், வாழ்வில் புதிய நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் சீர்த்திருத்தம் செய்வது அவசியம். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்ட, திட்டம் தவறாமல் பின்பற்றவும்.

## கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

குழப்பமான செயல்களில் இருந்து விடுபடுவீர்கள். முன்னேற்ற பாதையின் இலக்கு தெளிவாக புலப்படும். பசு, பால் பாக்யயோகம் அமைந்து, பலவித நன்மை பெறுவீர்கள். வீடு, வாகனத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். புத்திரர், உங்கள் சொல்கேட்டு நடப்பர். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களின் வருகை மகிழ்ச்சி தரும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

## சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

மனதில் உற்சாகம், பணிகளில் நேர்த்தி நிறைந்திருக்கும். அக்கம் பக்கத்தவர், நல் அன்பு பாராட்டுவர். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணி தேவைப்படும்.புத்திரர், வெளியிடம் சென்று வருவதில் ஆர்வம் கொள்வர். உடல் நலம் ஆரோக்கியம் பெறும். இல்லறத்துணையின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபார நடைமுறை சிறப்பான அளவில் இருக்கும்.

## கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

இளைய சகோதரர், சிலவிஷயங்களில் உங்களிடம் வேற்றுமை கொள்வார். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.புத்திரரின் ஆர்வமிகு செயல்களை ஒழுங்கு படுத்துவது, உரிய நன்மை கிடைக்க உதவும். பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க வேண்டாம். இல்லறத்துணை, ஆன்மிக நம்பிக்கையில் முன்னேற்றம் காண்பார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு, உரிய நன்மை பெற உதவும்.

## துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

செயல்களில் பரிமளிப்பு அதிகரிக்கும். புதிய பாதையில் வாழ்க்கை பயணம் அமையும். உடன்பிறந்தவர் கூடுதல் அன்பு, பாசத்துடன் உதவுவர். வாகனத்தில் பராமரிப்பு, பயணத்தை இனித்தாக உருவாக்கும்.புத்திரரின் தேவையை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். எதிர்ப்புகள் விலக, இஷ்ட தெய்வ அருள்பலம் துணை நிற்கும். தொழில், வியாபாரம் அபிவிருத்தி பெற, சில மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பினை தவறாமல் ஏற்கவும்.

## விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பொது இடங்களில் எவருடனும் அதிக நேரம் பேச வேண்டாம். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம்.புத்திரர் தம் சொல், செயலில் சிறப்பு பெறுவர். எதிரியிடம் விலகுவதால் நேரம், பணவிரயம் தவிர்க்கலாம். இல்லறத்துணை விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வரும் இடையூறை தாமதமின்றி சரி செய்ய வேண்டும்.

## தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

சிறு பணியும் சிறப்பாக அமைந்து பேரும், புகழும் பெற்றுத் தரும். சிலர் மீது நீங்கள் கொண்டிருந்த வெறுப்பு உணர்வு விலகும். கூடுதல் பணவரவில் சேமிப்பு அதிகரிக்கும். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு.புத்திரர், உங்களை சார்ந்து செயல்பட விரும்புவர். உங்களின் அந்தஸ்து கண்டு எதிரி வியப்புறுவர். இல்லறத்துணை வழி சார்ந்த உறவினரின் உதவி கிடைக்கும்.

## மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**

புதியவர்களின் அறிமுகம், மகிழ்ச்சியை தரும். பிரார்த்தனை நிறைவேறி, இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.புத்திரரின் செயல்குறையை சரி செய்வதில் நிதானம் வேண்டும். சொத்து ஆவணத்தை பிறர் பொறுப்பில் தரக்கூடாது. இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய முக்கியத்துவம் தருவது, ஒற்றுமை வளர உதவும். தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெறும்.

## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

உடன்பிறந்தவர் கூடுதல் அன்பு, பாசம் கொள்வர். வாகன பயணம் எளிதாக அமையும்.புத்திரர் செயல்களை கவனித்து, ஒழுங்கு செய்வது நல்லது. எதிரி, உங்களின் நல்ல குணம் அறிந்து கொள்ள புதிய சூழ்நிலை உருவாகும். இல்லறத்தின், குடும்பத்தின் செலவுக்கு சேமிப்பு பணம் தந்து உதவுவார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள், இலக்கு நிறைவேற்ற கால அவகாகசம் எடுத்துக் கொள்வீர்கள்.

## மீனம்


**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

இளைய சகோதரர், கூடுதல் அன்பு பாராட்டுவர். சிலர் புதிய வாகனம், வீடு வாங்க நல்யோகம் உண்டு. புத்திரர், உங்களை நண்பருக்கு இணையாக கருதி, சமூக நிகழ்வு பற்றிய கருத்துக்களை பகிர்ந்து கொள்வர். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். தொழில், வியாபாரம் வளர்ச்சி நிலையை அடைந்து, செல்வ வளம் பெருகும். பணியாளர்கள், கடமை உணர்ந்து பணிபுரிவீர்கள்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 60



மூளை சுறுசுறுப்பாக வேலை செய்வதற்கு அதிகாலையில் எழுந்து விடுவதே நல்லது. என்ற கருத்தும் உண்டு.

ஆகவே மாணவர்கள் அதிகாலைக் குளிர்மையில் எத்தனை மணிநேரம் முடியுமோ அவ்வளவுக்குப் படிப்பார்கள்.பலர் காலையில் விழித்தெழுந்து உடற்பயிற்சி செய்வார்கள்.எமது மாடி வீட்டின் முன்பாக கடற்கரை வீதியில் பெருந்தொகையானோர் கிரமமாக உலா செல்வதும் ஒரு நாளாந்த காட்சியே. கடற்கரையில் காலைப் பொழுது தனி அலாதியானது.அடி வானில் சூரியன் மெதுவே எழுவதும் கற்றை கற்றையாக தனது ஒளியை வானில் கோடுகளாக வீசுவதும் ,சிறுசிறு அலைகள் வெள்ளை மணலில் மெதுவாக வருடுவதும் ,எம்மை அந்த அமைதியிலே சேருமாறு காந்தம் என அழைக்க, அந்த அழகு விதானத்துக்குள் நாமும் சென்று கடல் நீரில் கால் நனைய நடப்போம். சிறிது நேரம் ஜிம்மிமையையும் தனியே ஓடி உலாவ விடுவோம். அந்தக் குட்டியின் பூரிப்பு அதன் உடல் பூராகவும் தெரியும்; மகிழ்ச்சியில் அதுதரையில் உருண்டு புரண்டு ஓடுவது கொள்ளைக் காட்சியாக இருக்கும்.எமக்கு ஏதாவது காலையில் வேலை இருந்து கடற்கரைக்குச் செல்ல முடியாது போய்விட்டால் ஜிம்மியை அநேகமாக மாலையில் கூட்டிச் செல்வோம். கடற்கரையில் எமக்கு வசதியான ஓர் இடத்தில் ஒரு சாப்பாட்டுக்கடை; வகைவகையாக ருசியான தமிழ் உணவு. விலையும் மலிவு. மாலையில் எமது நண்பர்களைக் கவர்ந்து இழுக்கும் இடம் அது. சூழலும் இதமாக இருக்கும். தமிழ்ப் பாரம்பரிய கர்நாடக இசை அருகே உள்ள கோவில் ஒலிபெருக்கியில் வெளியை நிரப்பும்.அரசியல் சிக்கல்களால் கொந்தளித்துப் போயிருந்த எனது உள்ளத்துக்கு, மாசற்ற இந்த இயற்கை உலகும் அதன் இயல்பான சூழலும் சாந்தத்தை அளித்தன.

### புதுடில்லியில் புதிய நிர்வாகம்

இவ்வை எல்லாவற்றுக்கும் அப்பால் எதிர்பாராத நிகழ்வுகளையும் திருப்பங்களையும் ஏற்படுத்தியவாறு போராட்ட வரலாறு தொடர்ந்தது. இந்திராகாந்தி அவர்கள் ஒக்ரோபர் 1984 இல் படுகொலை செய்யப்பட்டதும் புதுடில்லியின் அரசியல் சூழலும் திடீர் மாற்றம் கண்டது. ராஜீவ்காந்தி தமது தாயின் இடத்தில் பிரதம மந்திரியாக அமர்ந்து நேரு குடும்ப ஆட்சியைத் தொடர்ந்தார். அரசியல் முதிர்ச்சியும் நடைமுறைத் தேர்ச்சியும் கொண்ட இந்திரா காந்தியின் எதிர்பாராத திடீர் மறைவு தமிழ்விடுதலை இயக்கத்துக்கும் ஒருபேரிடியாக விழுந்தது. தமிழ்மக்களின் சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தின் வரலாற்றையும் அதன் சிக்கலான பரிமாணங்கள் பற்றியும் ஆழமானபுரிந்துணர்வு இந்திராகாந்தியிடம்இருந்தது. ஜெயவர்த்தனாவின் ஒடுக்குமுறைக் கொள்கைகளை அவர் எதிர்த்தார். ஒடுக்கப்பட்டவர்களின் பரிதாப நிலை மீது அனுதாபம் கொண்டவராக இருந்தார்.சிங்கள அரசுக்கு எதிரான தமிழ்மக்களின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை அவர்ஆதரித்தார் . தமிழ் மக்களின் நியாயம் மட்டில் அவருக்கு அனுதாபம் இருந்ததாலேயே. தமிழ்ப் போராளி இயக்கத்துக்கு இராணுவப் பயிற்சி அளித்தது. ஆயுதம் வழங்கும் துணிகர முடிவை திருமதி காந்தி மேற்கொண்டார்.

(பதிவு தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சொந்தமில்லா பந்தங்கள்

ப.விஷ்ணுவர்த்தினி

இறைவனை நொந்து நொந்து தான் மீதமுள்ள என் வாழ் நாளையும் கழிக்க வேண்டும் என்ற விதமாக எல்லாம் நடந்து முடிந்து விட்டது.

யாரை நொந்து என்ன பயன்? எல்லாம் எம் தலைவிதி. தலைவிதி என்றால் அதை ஒட்டு மொத்தமாக எல்லோருக்கும் சேர்த்துத் தான் இறைவன் எழுதுவானோ?

இந்த முள்கம்பி வேலிக்குள் சிறைப்பட்டிருக்கும் எல்லோருக்குமே ஒரே தலைவிதி தானோ? எங்களோடு சேர்ந்து இந்த நரக வேதனைகளை அநுபவிப்பதற்கு இந்தப் பிஞ்சுகள் என்ன பிழை செய்தார்கள்?

அந்த மூன்று குழந்தைகளையும் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் மூவரும் தங்களுக்குக் கிடைத்த உணவை "அரக்கப் பரக்கப்" சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாவம்! இந்த முகாமுக்கு வந்த பின்பு தான் இப்படியாவது சாப்பிட முடிகிறது. கடந்த ஒன்றரை வருடங்களாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு அலைந்து திரிந்த பெற்றோரின் பின்னால் இழுபட்டுத்திரிந்த இவர்களுக்கு சாப்பாடும் தண்ணீரும் அரை வயிறும் கால் வயிறும் தான்.

அவர்களைப் பார்க்கையில் எனக்கு அவர்கள் மேல் பச்சாதாபமே மேலிடு கிறது. அழகான அந்தக் குழந்தைகளைப் பார்த்து, எனக்கு அப்படிப் பேரப்பிள்ளைகள் அமையவில்லையே என்று எத்தனை நாள் கவலைப்பட்டிருக்கிறேன். இன்று அந்த அழகெல்லாம் கெட்டு, எலும்பும் தோலுமாக இருக்கும் இவர்கள் பெற்றோரையும் இழந்து என் அரவணைப்பில் ...

தெய்வம் என்று ஒன்று இருந்திருந்தால் இவ்வளவு துன்பமும் எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டிருக்குமா? குஞ்சு குருமன் முதல் கொண்டு கிழங்கள் வரை எவ்வளவு தூரம் அல்லாடிப் போய் விட்டார்கள்? இந்தக் குழந்தைகளும் தான், குதூகலிப்பும் கும்மாளமுமாய் ஓடித்திரிந்தவர்கள் தானே. இன்று பரட்டைத் தலையும் தடி போன்ற மெலிந்த உடலும் கொண்டவர்களாக அரையும் குறையுமாக அழுக்கேறிய துணிகளை உடலில் சுற்றிக் கொண்டு, போரின் அடையாளங்களைச் சுமப்பவர்களாத் தெரிகின்றனர்.

இவர்கள் எனக்கு உறவோ, இரத்த பந்தம் உள்ளவர்களோ இல்லை. இவர்களின் பெற்றோர்கள் பத்து வருடங்களுக்கு முன்னர் காதல் திருமணம் செய்து எனது வீட்டுக்கு அருகில் வீடு அமைத்து வாழத் தொடங்கினார்கள்.

**" இந்தக் குழந்தையை வளர்த்து, எனக்கு ஒன்றென்றால் யாரிடமாவது கையளிக்கலாம். இந்தக் குழந்தைக்கு விதி யிருந்தால் என் பிள்ளையிடமே சேர்ப்பிக்கலாம். இந்தக் குழந்தையை நான் தத்தெடுத்தது போல மற்றப் பிள்ளைகளுக்கும் யாராவது வாழ்வு கொடுக்க முன் வருவார்கள்.**

அவர்களின் அறிமுகம் எனக்கு உடனடியாகவே கிடைத்தது. அப்போது நான் என் சீவியத்தை ஓட்டுவதற்காக பிட்டு, இடியப்பம், தோசை என சாப்பாட்டு வகைகளை எல்லாம் செய்து விற்று வந்தேன். என்னோடிருந்த என் ஒரே ஒரு பிள்ளையும் இந்த நாட்டுச் சூழலுக்குப் பயந்து வெளிநாடு சென்று விட, நான் என் முதுமைக் காலத்தைத் தனியே கழித்துக் கொண்டிருந்தேன்.

என் மகன் மணம் முடித்து நீண்ட காலத்துக்குப் பிறகு பிறந்த ஏக புத்திரன். பிறக்கும் போதே தகப்பனைத் தின்று விட்டுப் பிறந்தவன். நிர்க்கதியான நிலையில், அவனை வளர்த்து ஆளாக்குவதற்கு படாதபாடு பட்டு வந்தேன்.

விடலைப் பருவத்தையும் கடந்து வளர்ந்த அவனின் வளர்த்தி கண்ணுக்குக் குத்துவதாக இருந்தது. யார் யாரையோ கும்பிட்டு மன்றாடி அவனை அரபு நாடொன்றுக்கு அனுப்பி வைத்தேன். ஆனாலும், தகுந்த வேலையுமின்றி அதிக சம்பளமுமின்றி அங்கும் அலைந்து கொண்டிருந்தான் என்பது மட்டும் தெரிந்தது.

மகனைப் பிரிந்த சோகத்திலிருந்த எனக்கு, அந்தப் தம்பதியினின் தொடர்பு ஒத்தடமாக இருந்தது. அவர்களுடைய தொடர்பினால் என் பிள்ளையுடனும் இடையிடையே தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது. கடவுள் மூன்று குழந்தைகளையும் அவர்களுக்குக் கொடுத்தான். இலட்சக்கணக் கானோரின் வாழ்க்கையுடன் விளையாடிய யுத்தம் இவர்களையும் விட்டு வைக்கவில்லை.

ஒரு வேளை சாப்பாட்டுக்காக கையிலிருந்த பொருள்கள் எல்லாவற்றையும் இழந்தனர். உயிரைப் பாதுகாக்க ஊர் ஊராக இடம் பெயர்ந்தனர். உடுத்த துணியுடன் நாள்கள், வாரங்கள், மாதங்கள் என பதுங்குகுழிகளுக்குள்ளேயே பதுங்கி இருந்தனர். வானில் வட்டமிட்ட "பருந்துகள்" எப்போது குண்டு மழை பொழியும் எனத் தெரியாமல் வெளியே தலை காட்டவே பயந்தனர்.

உணவுக்காகவும் உடலியற் தேவைகளுக்காகவும் வெளியே தலை காட்டியவர்கள் குண்டு மழையில் நனைந்து உடல் சிதறிப் பலியாகினர். எங்கும் ஓலம்; அவலம்; எங்கும் பிணக் குவியல்கள்; எங்கும் இரத்த வாடை.

அந்தத் தம்பதியினர் கூட குழந்தைகளையும் சுமந்தபடி விதியின் பாதையின் ஏற்றுண்டு அலைந்தனர் . எத்தனை எத்தனை கொடுமை நிறைந்த சம்பவங்கள், சாட்சியங்கள்.

-குடும்பமாகவே ஒரு கணத்தில் உடல் சிதறி மடிந்தவர்கள்.-குழந்தை பிறந்து இரத்தவாடையும் ஈரமும் காயும் முன்னரே "ஷெல்" பட்டு மடிந்த தாயும் குழந்தையும் -நடக்க முடியாமல் பின் தங்கியதால் குண்டு மழையில் சிக்கி மடிந்த முதியவர்கள்- யாரையும் எவரும் காப்பாற்ற முடியாத அவலம். தாங்கள் தாங்கள் உயிரே பெரிதென எண்ணி ஒவ்வொருவரும் ஓடிக் கொண்டிருக்கும் அவலம். மனிதம் செத்துக் கொண்டிருந்தது. காயம் பட்டுத் துடித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணைக் காப்பாற்ற வேண்டி, அவளிடம் ஓடிச் சென்ற வேளை மீண்டும் அந்த இடத்தில் வந்து வீழ்ந்து வெடித்த ஷெல்லில் இவர்களுடைய தாய் அந்த இடத்திலேயே சிதறிப் போனாள்.

தெய்வாதீனமாகத் தான் அந்த இடத்துக்கு வந்தேன். மூன்று குழந்தைகளும் தந்தையை நெருங்கி நின்று அழுது கொண்டிருந்தார்கள். அருகில் உருத் தெரியாமல் தாயின் உடல்.



என்னைக் கண்டதும் அந்த வேளையிலும் அவனின் கண்களில் சிறு துளி ஒளி. குழந்தைகள் என்னைச் சுற்றி என் கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு "அம்மம்மா" என்று அழுதார்கள். அவன் களைக்கக் களைக்க, அந்த வேளையிலும் தன் அவலங்களை யெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. சொற்ப நேரத்திலேயே அவனின் உயிரும் பிரிந்தது. ஒரு கணம் தான் அந்த வேதனை. உடனடியாகவே உயிர் பற்றிய பயம் தலை தூக்க, பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு ஓடினேன். கடைசிக் குழந்தை கைக் குழந்தை.

மற்றைய இரு பிஞ்சுகளும் என்னோடு இழுபட்டார்கள். அந்தப் பிரதேசத்தை விட்டு எல்லோரும் வெளியேறி விட வேண்டும் என்ற அறிவிப்பு வந்ததுமே, சனத்தோடு சனமாக, நானும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு சென்றேன். முள் கம்பியால் சுற்றி வர வேலி அடித்த கூடாரமொன்றுக்குள் முகாம் வாழ்க்கை. வெயில், மழை, குளிர் எல்லாம் சர்வ சாதாரணமாகிப் போக, குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு, கடந்த கால நினைவுகளில் மூழ்கிப் போய் கண்ணீரும் கம்பலையுமாக என் வாழ்வு இந்த ஒன்றரை வருடங்களாகக் கழிந்து போய்க் கொண்டிருக்கிறது. இன்று காலையில் தான் சில அதிகாரிகள் வந்து சொந்த இடத்திலிலேயே என்னை மீண்டும் குடியேற்ற அழைத்துப் போக வருவதாகச் சொல்லியிருந் தார்கள். அப்போது முதல் இந்தக் கணம் வரை இந்தக் குழந்தைகளைப் பற்றிய யோசனையே என்னை அரித்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் மூவரையும் என்னால் காப்பாற்ற முடியுமா? மனித சஞ்சாரமே குறைந்த மண்ணில் என் முன்னைய தொழிலைப் பார்க்க முடியுமா?

இந்த மூன்று குழந்தைகளையும் அழைத்துச் சென்ற வேளையில் எனக்கு ஏதாவது நடந்து விட்டால் இந்தக் குழந்தைகளின் கதி? ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாக கைக்குழந்தையைத் தூக்கிக் கொள்கிறேன். ஏனைய இரு குழந்தைகளையும் அணைத்து முத்தமிடுகிறேன். அவர்களுக்கு என்ன விளங்கப் போகிறது? அலங்க மலங்க என்னை விழித்துப் பார்க்கிறார்கள்.

"மீனாட்சி, மீனாட்சி..."

என்னைப் பெயர் சொல்லி அதிகாரிகள் அழைக்கிறார்கள். கைக்குழந்தையுடன் நான் மெல்ல நகருகிறேன். என்னைச் சுற்றி என் கால்களைப் பிடித்துக் கொண்டு நிற்கும் இரு குழந்தைகளினதும் கைகளை மெல்ல எடுத்து விடுகிறேன்.

"அம்மம்மா இப்ப வருவன், இங்கை நில்லுங்கோ குஞ்சுகள்..." என்னை அறியாமலே பீறிட்டுக் கொண்டு வரும் கண்ணீரை அடக்க மாட்டாதவளாக, அவர்களைக் கலங்கிய கண்களோடு நோக்குகிறேன்.

இந்த உலகத்தின் சூது, வாது தெரியாதவர்களாக அந்தக் குழந்தைகள் என்னையே "குத்திட்டு"ப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள்.

எனக்கு என்ன செய்வெதன்றே தெரியாதிருக்கிறது. "இந்தக் குழந்தையை வளர்த்து, எனக்கு ஒன்றென்றால் யாரிடமாவது கையளிக்கலாம். இந்தக் குழந்தைக்கு அதிர்ஷ்டமிருந்தால் என் பிள்ளையிடமே சேர்ப்பிக்கலாம். இந்தக் குழந்தையை நான் தத்தெடுத்தது போல மற்றப் பிள்ளைகளுக்கும் யாராவது வாழ்வு கொடுக்க முன் வருவார்கள்." என் நடையைச் சற்று விரைவாக்கிக் கொண்டு, காத்திருக்கும் பஸ்ஸை நோக்கிச் செல்கிறேன். தூரத்தில் அந்த இரு குழந்தைகளும் என்னைப் பார்த்துக் கொண்டே நிற்பது தெரிகிறது. மீண்டும் என்னிடத்தில் இறை நம்பிக்கை தொற்றிக் கொள்கிறது.

"கடவுளே, இவர்களைக் காப்பாற்றும்!

என் அந்தராத்மா மன்றாட்டமாக அவனிடம் இறைஞ்சுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு மறக்காத மாமனிதர்

**- குழைக்காட்டான்**

இலங்கைத் தீவில் சிறுபான்மையினராக வாழும் தமிழ் மக்களுக்காகவும் தமிழ்த் தேசியத்துக்காகவும் குரல் கொடுத்து தமிழர் தரப்பு நியாயங்களை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முற்பட்டவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ந.ரவிராஜ். அவரின் செயலால் தமிழர் தரப்பு நியாயங்கள் சிங்கள மக்கள் மத்தியில் புரிந்து கொள்ளப்பட்டு, அரசுக் கெதிராக சிங்கள மக்களும் போர்க்கொடி தூக்கக் கூடும் எனப் பேரின வாதிகள் எண்ணினார்கள். இதனால் தான்



பகிரங்கமாக வீதியில் ரவிராஜ் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

1987 ஆம் ஆண்டு இலங்கையின் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பதிவு செய்து கொண்டவர் ரவிராஜ். இதன் பின்னர் தன்னால் இயன்றளவுக்கு அரசியல் கைதிகளுக்கும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கும், சட்ட ஆலோசனைகளை வழங்க ரவிராஜ் அசோசியேட்ஸ் எனும் சட்ட நிறுவனத்தை உருவாக்கினார்.

அது மட்டுமல்லாது எந்தவொரு அரசியல் தலைவரும் கொண்டிராத துணிச்லோடு தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட அநீதிகளுக்கெதிராக குரல் கொடுக்கவும் அவர் சிறிதளவும் தயங்கவில்லை.

அந்தக் காலகட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான அச்சுறுத்தல்களைத் தணிக்கும் நோக்கில் மனோ கணேசன், சிறிதுங்க ஜயசூரிய ஆகியோருடன் இணைந்து மக்கள் கண்காணிப்புக் குழு என்றொரு அமைப்பையும் ரவிராஜ் உருவாக்கினார். மக்கள் கண்காணிப்புக்குழுவின் ஆதாரபூர்வமான தகவல்களின் முன்னால் அரசால் தாக்குப் பிடிக்க முடியாமல் போயிருந்தது.

இலங்கை இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளான அப்பாவித் தமிழ் இளைஞர்களை மீட்டு அவர்களின் வாழ்வில் மீண்டும் ஒளியேற்றியவர் ரவிராஜ்.

தமிழரின் உரிமைகளை வென்றெடுக்கும் அரசியல் போராட்டக் களத்துக்கு பலமூட்டும் தூணாகவும் இருந்தார்.

2001ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகர முதல்வராகப் பதவியேற்றதுமுதல் தமிழர் அரசியலில் அவர் பிரகாசிக்கத் தொடங்கினார். போர்ச் சூழலில் நலிவுற்றிருந்த மாநகர சபையின் பணிகளை மீளக் கட்டியெழுப்புவதில் மும்முரமாக ஈடுபட்டார். அதே ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அவர் தெரிவு செய்யப்பட்டார். பின் 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

மாமனிதர் ரவிராஜ் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த காலம் வெறும் 5 ஆண்டுகள்தான். எனினும், அந்தக் குறுகிய காலப்பகுதியில் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினரும் செய்யமுடியாத பணிகளை அவர் மக்களுக்காகவும் தமிழ் தேசியத்திற்காகவும் ஆற்றியிருந்தார் என்பதை எவராலும் மறுக்க முடியாது. பொதுவாக எத்தகைய வேலைப்பளு இருந்தாலும் மாதாந்தம் சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் உள்ள அவரது இல்லமான ராஜ் அகத்தில் திரளும் மக்களைச் சந்திப்பதற்கு அவர் ஒருபோதும் தவறியதில்லை.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்வதுடன், பிரதேசத்திலுள்ள கல்விமான்களதும், முதியோர்களதும் ஆலோசனைகளைச் செவிமடுத்து அதன் வழியே, தனது பணிகளைச் செய்து வந்தார். இன்னொரு 'ஹிரோஷிமா' என ரணில் விக்கிரமசிங்கவினால் வர்ணிக்கப்பட்ட அழிந்து போன சாவகச்சேரி நகரத்தை மீளக் கட்டியெழுப்புவதிலும், தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்களை மீள்குடியேற்றுவதிலும் முன்னின்று உழைத்தார். துன்பப்படுவோருக்குத் தானாகவே முன்வந்து உதவும் பண்பைக் கொண்டிருந்தார். இதனால் தான் அவர் குறுகிய காலத்திலேயே எல்லோராலும் விரும்பப்படும் ஒரு தலைவரானார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும், அதற்கான நியாயங்களையும் மக்கள் அனுபவித்துவந்த சொல்லொணாத் துன்பங்களையும் சிங்கள மக்க ளுக்கும், சர்வதேசத்திற்கும் உரிய முறையில் கொண்டு சென்றார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தமையால் தமிழர் தரப்பு நியாயங்களை மிக லாவகமாகக் கையாண்டு தனது கருத்துக்களைக் கேட்போர் மனதில் உறைக்கவும், உணரவும் வைத்தார்.

தமிழர் பிரச்சினைகளை வெளிக்கொணர்வதில் உள்நாட்டு, வெளி நாட்டு ஊடகங்களைச் செம்மை யான முறையில் பயன்படுத்தினார்.

அதாவது தெற்கிலுள்ள சிங்களக் கடுங்கோட்பாட்டாளர்கள் அவரை விடுதலைப் புலியாகவே கருதினர். தமிழர் உரிமைக்காகப் போராடுபவர்கள் சிங்கள மக்களின் விரோதிகள் என்ற சிங்களக் கோட்பாட்டாளரின் கூற்றைப் பொய்யென்று சிங்கள ஊடகங்களினூடாக எடுத்துக்கூறி, இனங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்த்தார்.

அதுவே இவரது உயிரைப் பறிப்பதற்குரிய முதன்மைக் காரணியாக மாறியது.

அதாவது 10 ஆம் திகதி நவம்பர் 2006 ஆண்டு வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியிலிருந்து 8 .00 மணிவரை சிங்கள தொலைக்காட்சியில் இவருடைய இறுதி நேர்காணல் இடம் பெற்றது. அந்த காலகட்டமானது போர் மீண்டும் ஆரம்பித்த காலம். அப்போது ஏ-9 வீதி வாகன போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டிருந்தது. அதற்கெதிராக நாடாளுமன்றில் குரல் எழுப்பியிருந்தார். அதனால் இவரை நேர்கண்டவர் "ஏ-9 பாதை மூடினால் என்ன? கப்பல் மூலம் தேவையான உணவுப்பொருள்கள் போகின்றன தானே"என்று கேட்டார். அதற்கு ரவிராஜ் நேர்கண்டவரை பார்த்து "ஜனாதிபதியிடம் கேளுங்கள். அம்பாந்தோட்டைக்கான வீதியினை மூடிவிட்டு கப்பல் மூலம் பொருள்களை அனுப்புவீர்களா?" என்று திருப்பி அடித்தார் ரவிராஜ். இதுவே அவரின் இறுதிக்கேள்வியாகிப் போனது.

**கொழும்பில் நடந்த அவரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும் தலைவர்களும் கலந்து கொண்டனர். இது ரவிராஜ் இன உணர்வுள்ள ஒரு தமிழனாக மட்டு மன்றி ஒரு நல்ல மனிதனாகவும் வாழ்ந்த மைக்கும் சாட்சியானது.**

அன்று நேர்காணலை முடித்து கொண்டு கொழும்பு நாரகேன்பிட்டிய மனிங்ரவுனில் உள்ள அவரது வீட்டுக்கு சென்று விட்டு அங்கிருந்து காலை 8.30 மணியளவில் அலுவலகம் நோக்கி செல்லும் போது அவர் மீது இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ரவிராஜ் சிகிச்சை பலனின்றி காலை 9.20 மணிக்கு உயிரிலும் மேலாக நேசித்த தமிழினத்தை விட்டுப் பிரிந்தார்.

கொழும்பில் நடந்த அவரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான சிங்கள மக்களும் தலைவர்களும் கலந்து கொண்டனர். இது ரவிராஜ் இன உணர்வுள்ள ஒரு தமிழனாக மட்டுமன்றி ஒரு நல்ல மனிதனாகவும் வாழ்ந்தமைக்கும் சாட்சியானது.

அதனால் தான் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருதை வழங்கி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ரவிராஜை கௌரவித்திருந்தார்.

எமது இளந்தலைமுறையின் விடிவு தேடி களமிறங்கி வீறுநடைபோட்ட ஓர் இளம் அரசியல் தலைவனான மாமனிதர் நடராஜா ரவிராஜ் காவியமாகி எட்டு ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இந்த எட்டு ஆண்டுகளில் எமது அரசியல் களம் வேகமான, மோசமான பல மாற்றங்களை அடைந்து, தற்போது இந்த நாட்டில் தமிழினத்தின் இருப்பே ஒரு கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

இதைத்தான் அன்று தந்தையை இழந்து நின்ற சின்னஞ்சிறு சிட்டு பிரவீனா (ரவிராஜின் மகள்) சொன்னது. "என் அப்பாவை இழந்து துன்பத்தில் வீழ்ந்து விட்டோம். எல்லோரும் இப்போது வருகிறார்கள். அப்பாவின் உடல் புதைக்கப்பட்டு விடும். அத்தோடு எல்லோரும் மறந்து விடுவார்கள்" அன்று அந்த சின்னம் சிறு சிட்டு சொன்னது போன்று ரவிராஜை மட்டுமல்ல தமிழ்மக்களின் விடிவுக்காக தமது உயிர்களைத் தியாகம் செய்த அத்தனை பேரையும் நாம் மறந்து விட்டோம். ஆனால் காலமும் வரலாறும் வீரர்களின் பெயரை மறப்பதில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமியும் கலக்ஸியும்

**அத்தியாயம் - 23**

## அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)


படலை ஜே.கே

"அந்த ப்ரோகிராம் என்ன சொல்லிச்சு?"

"எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட சாத்தியக்கூறுகள் நிஜத்திலேயே இடம்பெறுகின்றன. ஆனால் எல்லாமே ஒரே பார்வையில் இடம்பெறாது. பார்ப்பவரை பொறுத்து அவற்றில் ஏதாவது ஒரு நிகழ்வு இடம்பெறுகிறது. ஒருவர் பார்க்கும்போது உயிரோடு இருக்கும் பூனை இன்னொருவர் பார்க்கும்போதும் உயிரோடு இருக்கவேண்டும் என்பதில்லை."

"என்ன சொல்லுறீங்க? அப்பிடி எண்டா ஒரே சமயத்தில் ஒரு பூனை உயிரோடவும், இறந்துபோயும் இருக்கலாமா? .. பார்க்கிற ஆளை பொறுத்து அது எது என்பது மாறுபடும் எண்டுறீங்களா?"

"நம்ம கஷ்டமா இருக்கு இல்ல? ஆனா அது தான் உண்மை .. நீயும் நானும் ஒரே தளத்தில இருக்கிற படியா இரண்டு பேருக் குமே பார்க்கும் போது பூனை உயிரோட இருக்கலாம் .. அதே சமயம் இன்னொரு தளத்தில பூனை செத்துப் போயிற்று .. நீ தேர்ந்தெடுக்கிற தளம் தான் இங்கே எல்லாமே அதால தான் நல்ல வினைகளை செய்தா அடுத்த பிறப்பில நல்லா இருக்கலாம் என்று சில பூமி ப்ரோகிராம்கள் கண்டு பிடித்திருந்தன. அடுத்த பிறப்பு என்று ஒன்றில்லை .. தளம் தான் வேறு .. அவ்வளவே.."



"ஓ .. இப்ப நாங்க தளத்தை கொஞ்சம் மாற்றினால் மிகிந்தர்களால் அழிக்கப்படாத பூமியை தொடர்ந்து வைத்திருக்கலாமா?"

"கைண்ட் ஒப்.... என்ன பிரச்சினை எண்டா மிகிந்தர்கள் இயங்கிற தளம் பூமிண்ட குவாண்டம் தளம் அல்ல. அவர்கள் தங்கள் தளத்தில் எப்போது பூமி கண்ணிலே மாட்டுதோ அந்தக்கணத்தில் அப்போது அதை அழித்தே தீருவார்கள்.. விளங்குதா? வி கான் டிலே இட் .. ஆனா முற்றாக தவிர்க்க முடியாது"

"ம்ம்ம் .. அப்பிடி எண்டா .. மிகிந்தர்கள் தாக்குறதுக்கு முன்னாலேயே அந்த கேள்வியை கண்டுபிடிக்கிற மாதிரி ப்ரோ கிராம் தளத்தை மாற்றோணும், சரியான காலத்தை கண்டுபிடிச்சு திரும்பவும் இடையில இருந்து ரன் பண்ணோணும் .. ஆம் ஐ ரைட்?"

"யெஸ் .. வி கான் ட்ரை இட்"

ஆனா ரன் பண்ணுறதுக்கு இப்ப கந்தசாமி எண்ட ஒரு ப்ரோகிராம் மட்டும் தானே இருக்கு? கந்தசாமியை வச்சுக்கொண்டு மொத்தப் பூமியை உருவாக்கலாமா?"

"மொத்த பூமியும் தேவையில்ல.. எங்களுக்கு தின்னவேலி.. அது சார்ந்த இடங்கள் சம்பவங்கள் ஆள்கள் தான் வேண்டும்.. அது கந்தசாமியின் மூளைல பதிஞ்சு இருக்கு.. அதை வச்சு அந்த ஏரியாவை ரிஸ்டோர் பண்ணலாம்.. இட்ஸ் ஓகே மிச்ச பகுதி எல்லாம் ப்ளாங்கா விட்டிடலாம். இல்லாட்டி கடலால நிரப்பலாம் .. வேறு ஐஸ்கட்டி போடலாம் .. ரிகிரியேஷனுக்கு அந்த இடங்களில் சக்தியை செலவழிக்கிறது சுத்த வேஸ்ட்"

"ஐடியா ஓகே தான் .. வோர்க் ஆகுமா எண்டு தான்"

"ஆகும் .. இதை ஏற்கனவே பல தடவை செய்திருக்கிறம்"

"என்னது?.. ஏதோ சொன்னீங்களே. ஏற்கனவே செய்திருக்கிறம். அப்பிடி எண்டால் ஓ மை காட்"

"யெஸ் .. தட்ஸ் ரைட் .. நீ பிறக்கும் முன்னமேயே இதெல்லாம் நடந்திருக்கு, பல தடவை மிகிந்தர்கள் பூமியை வந்து அழிச்சு .. ஒவ்வொரு முறையும் பிராஞ்ச் பொயிண்ட் மாற்றி திரும்பி ரீ-ரன் பண்ணி, ஒல் மோஸ்ட் கேள்வியை கண்டுபிடிக்கிற ரைம்ல .. திரும்பி அழிஞ்சு"

"வாவ்.."

"முதல் தடவை டைனோசர் ரைம்லயே அழிஞ்சு போச்சு .. நெக்ஸ்ட் டைம் லுமேரியா கண்டத்தோட அழிஞ்சு போச்சு .. என்ன ஆச்சரியம் என்றால் ஒவ்வொரு முறையும் திரும்பி ரிஸ்டோர் பண்ணும்போது பூமி ப்ரோகிராம் ரன் பண்ணுற விதம் மாறிடும். டைனோசரோ, லுமேரியாவோ அடுத்தடுத்த ரைம்ல உருவாகலை .. அதே நேரம் உயிரனங்களின் விருத்தி அபரிமிதமாக இருந்தது .. தேடல் அதிகரித்து ஒரு கட்டத்தில .. கடவுள் இல்லை எண்டதைக் கூட கண்டுபிடிச்சிட்டாங்கள்.."

"ஆனாக் கடவுள் தான் இருக்கிறாரே எலிதாசன்325"

"வெல் விவாதத்துக்குரியது .. பட் இப்ப ரைம் இல்ல .. கந்தசாமியின் மைண்ட் தன்னால இந்தத் தளத்துக்கு இசைவாக்கமடைய முன்னர் நாங்க டிகொம்பைல் பண்ணி திரும்பி புரோகிராம் ரன் பண்ணனும்....எல்லாரும் கெதியா வேலையைப் பாப்பம்"

"நடந்தவற்றை நினைத்துப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே மீண்டும் அறிவிப்பு கேட்டது."

"கந்தசாமி யூ ஆர் கெட்டிங் லேட். டக்கென்று குளித்து தயாராகவும் ..நடந்ததை யோசிக்க இது தருணமில்லை. மறக்காமல் துவாயை எடுத்து வைத்துக்கொள்ளவும்"

"இவங்களின்ட ஆய்க்கினை வேற என்று முணுமுணுத்துக்கொண்டே குளித்து முடித்து கந்தசாமி தயாரானார். அறையில் வைத்திருந்த சபரிமான் பேர்கரை கடித்துக்கொண்டே ஆய்வு கூடத்தை நோக்கிச் செல்லலானார். அங்கே சக்கை உட்பட அத்தனை விஞ்ஞானிகளின் முகத்திலும் ஒருவித பரவசம். சுமந்திரன் கையில் ஒரு துண்டுடன் அம்மணமாக எல்லோருடனும் சிரித்துப்பேசிக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த கந்தசாமி தானும் இடுப்பில் கட்டியிருந்த துவாயை கையில் எடுத்து சுருட்டி வைத்துக்கொண்டார். அவ்வப்போது சக்கையும் மற்றவர்களும் பலவித உபகரணங்களைக் கொண்டு வந்து கந்தசாமியின் தலையில் வைத்து ஏதேதோ வாசிப்புகள் நிகழ்த்தினார்கள். சூரிய மண்டலத்தில் பூமிக்குரிய சுற்றுப்பாதை கிளியர் பண்ணியாயிற்று என்று கணனித்திரை பச்சைக் கலரில் மின்னியது. எல்லோர் மத்தியிலும் ஒரு பரபரப்பு தொற்றிக்கொண்டது. சுமந்திரன் கந்தசாமியை நெருங்கி வந்தார்.

"சக்கை எல்லாத்தையும் விளங்கப்படுத்தியிருப்பான் எண்டு நினைக்கிறன்"

"ஓம் சுமந்திரன் .. நாங்க ரெண்டு பெரும் .. காலத்தில பின்னால போய் .. பூமியின்ர எதிர்காலத்தை மாற்றப் போகிறோம் எண்டாங்கள், அப்பிடியா?"

"ம்ம்ம் எதிர்காலம் எண்டு ஒண்டு இல்ல .. போன சட்டத்தில எந்தப் பாதையில பூமி போனதோ அதைத் தவிர்த்து வேற பாதையில போகப் போகுது ..ஆனா ஒரே காலம் தான்"

"அதைத் தான் நானும் சொன்னன்.."

"சொன்னா விளங்காது .. .. சரி விடு.. அங்க போறதில டென்ஷனா இருக்கிறியா?"

"இல்ல .. பூமிக்கு தானே போக போறன் இனி இந்த வயர் உபத்திரவம் இல்ல .. கக்கூஸில கூட கமரா மாட்டி இருக்கிறாங்கள் இங்க"

"ம்ம்ம் சொன்னாப்போல. அங்க போனா பிறகு .. எல்லாமே மறந்திடுவாய் .. நீ கந்தசாமியா கூட இருக்கமாட்டாய் .. ஆனா சேம் ப்ரோகிராம் தான் வேற ஏதாவது கேள்வி இருக்கா?"

"கேள்வி இல்ல .. ஒரு சின்ன வேண்டுகோள்.."

"சொல்லு.."

"இந்த முறை செல்வராணியிட்ட நான் மாட்டாத மாதிரி ப்ரோகிராம் பண்ண முடியுமா? கருக்கு மட்டையால அடிப்பாளே.. அத நினைக்க தான் ஒரே ரென்ஷன்.."

சுமந்திரன் சிரித்துக்கொண்டே பதிலேதும் சொல்லாமல் வெள்ளை நிறப் பெட்டி ஒன்றுக்குள் கந்தசாமியை கிடத்திவிட்டு தானும் இன்னொன்றுக்குள் புகுந்துவிட, இராட்சத கணணித் திரையில் ஸ்டார்ட்டிங் 10, 9, 8 என்று கவுண்ட் டவுன் ஆரம்பித்திருந்த

(கலக்குவார் கந்தசாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதே! நீ கேளாமல் போனாயோ...?

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்

அப்பா இப்ப முந்தி மாதிரி இல்லை. ஒதுங்கி ஒதுங்கிப் போறார். முந்தி மாதிரி எங்களோடை அதிகம் கதைக்கிறதில்லை. தனக்கு ஒண்டும் இல்லை எண்டிட்டார். உங்களிட்டை வர மாட்டன் எண்டும் சொல்லிப் போட்டார். நான் தான் நட்டுப் பிடிச்சுக் கூட்டிக் கொண்டு வந்தனான் என்றாள் மகள் மிகுந்த மன வேதனையுடன்.



அப்பா முகத்தில் சலனமில்லை. விட்டேத்தியாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது 70 இருக்கும். மன விரக்தியாக இருக்குமோ என எண்ணிய நான் ஐயாவுக்கு என்ன பிரச்சினை? என்றேன்.

ஐயா மறுமொழி கூறவில்லை. ஆனால் எனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

ஐயாக்கு காது கேக்கிறது கொஞ்சம் குறைவோ?




என்று கேட்டபோது,

அப்படித் தெரியல்லை. எங்களோடை வடிவாக் கதைக்கிறார்தானே என்றாள்.

மேசையில் உள்ள பொருளை எடுப்பது போல மறு பக்கம் முகத்தைத் திரும்பிக் கொண்டு ஐயா உங்களுக்கு எத்தனை வயசு என்று கேட்டேன். மறுமொழி வரவில்லை. சந்தேகம் நிரூபணம் ஆகியது. அவருக்கு காது மந்தமாகிவிட்டது.

காது மந்தமாவது என்பது வயதானவர்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமானதும் பரவலானதுமான பிரச்சினை.

65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 15- 40 சதவிகிதத்தினரும்,

75 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவிகிதத்தினரும்,

85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினரும் செவிப் புலன் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே வயதாகும் போது காது மந்தமாவது என்பது நியதி போலவே இருக்கிறதே அன்றி விதிவிலக்காக அல்ல என்று சொல்லலாம்.

இது மிக மெது மெதுவாகவே ஏற்படுகின்ற பாதிப்பு என்பதால் பலரும் ஆரம்ப கட்டங்களில் தமக்கு இந்தக் குறைபாடு உள்ளதைத் தாமாகவே உணர்ந்து கொள்வதில்லை.

முகத்துக்கு நேர் முகம் பார்த்துப் பேசும்போது அவர்கள் புரிந்து கொள்வதால் உறவினர்களும் இதனை உணர்ந்து கொள்ளத் தாமதமாகலாம்.

### செவிப்புலன்

செவிப்புலன் என்பது நாம் எமது சூழலுடன் தொடர்பாடுவதற்கு மிக முக்கியமான உணர் திறனாகும்.

இதன் இழப்பானது மனித வாழ்வின் முழுமையை, அந்த வாழ்பனுபவத்தின் பூரணத்துவத்தையே சிதைத்துவிடும்.

செவிப்புலன் இழப்பானது மூளையின் செயல் வீச்சைக் குறைக்கிறது,

ஆரோக்கியமான உணர்வுகளை மரக்க வைக்கிறது,

மனநலத்தைப் பாதிக்கிறது,

கற்றலை முடக்குகிறது,

தொழில் வாய்ப்பைச் சிதைக்கிறது எனப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

### பாதிப்புகள்

வயதானவர்களின் காது மந்தமாகும் போது மற்றவர்களுடன் வழமை போலப் புரிந்து பேசி உறவாட முடியாமல் தடுமாறுகிறார்கள்.

தனிமைப்படுகிறார்கள்.

வழமையான நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்கிறார்கள்.

இவற்றால் ஏக்கத்துக்கும் மனவிரக்திக்கும் ஆளாகுகிறார்கள்.

இதனால் இவர்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தாமாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

இது தான் என்னிட ஆலோசனைக்காக வந்திருந்த பெண்மணியின் அப்பாவுக்கு நடந்தது.

காது மந்தமாதல் இரண்டு வகையானது.

முதலாவது ஒலியானது சூழலிலிருந்து காதுத் துவாரம் வழியாக செவிப்பறைக் குருத்தெலும்புகள் எனக் கடத்தப்படுதலில் உள்ள கோளாறாகும். செவிப்பறை பாதிப்படைதல்,
துவாரமடைதல்,
குருத்தெலும்புகள்;
இறுகுதல் போன்றவற்றால்
இது நேரலாம்.

இரண்டாவது வகை நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டது. ஒலியை உணர்தல், அதனைப் பாகுபடுத்தி விளங்கிக் கொள்ளல் ஆகியவை பாதிப்புறுவதால் ஏற்படுவது.

வயதானவர்களின் காது மந்தமாதல் மூப்படைவதின் ஒரு கட்டமேயாகும். ஒருவர் முகத்துக்கு நேரே பேசும் போது விளங்கிக் கொள்ளும் வயோதிபர், பலர் கலகல எனப் பேசும் போது புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஒலியை பாகுபடுத்தி விளங்க முடியாதிருப்பதாலேயே.

புறச் சத்தங்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் ஒலி எதிரொலிக்கும் இடங்களிலும் அவர்களால் கேட்க முடிவதில்லை.

அதே போல விரைவாகப் பேசுவோரின் உரையாடல்களையும், புதியவர்களின் பேச்சுக்களையும் அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

வயதானவர்களின் காது கேளாமையைக் முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சைகள் எதுவும் கிடையாது என்பது உண்மைதான்.

ஆயினும் அவர்களின் குறைபாட்டைத் தணிப்பதற்கு பல வழி முறைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்த உதவுவது உறவினர்களின் கடமையாகும்.

### காது கேட்கும் கருவிகள்

காது கேட்கும் கருவிகள் பலன் தரக் கூடும். ஆயினும் I0-15 சத விகிதமானவர்களே அந்தக் கருவிகளைத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள்.

இதற்குக் காரணம் அது இயற்கையான காதுக்கு மாற்றீடு அல்ல.

அத்துடன் கூட்டமான இடங்களில் புறச் சத்தங்களும் குழப்பக் கூடும். அந்தத் தருணங்களில் இரண்டு காதுக்குமே கருவியை உபயோகிப்பது பிரயோசனமாயிருக்கும்.

ஸ்பீக்கர் போன், ஒலி அதிகரித்த தொலைக் காட்சிப் பெட்டி, ஒலியுடன் ஒளியையும் உமிழும் அழைப்பு மணி போன்ற பாவனைப் பொருட்கள் அவர்களைச் சூழலுக்குள் திருப்தியோடு அணைந்து இயங்க உதவக் கூடும்.

### காது மந்தமானவர்களுடன் பேசும் போது நீங்கள் அவதானிக்க வேண்டியவை

முகத்தை வேறு பக்கம் பார்த்துக் கொண்டு பேசாதீர்கள். அவர்களுக்கு உங்கள் முகம் தெளிவாகத் தெரியும் படியான இடத்தில் இருந்து பேசுங்கள்.

குரலை உயர்த்திப் பேசாதீர்கள். சாதாரண குரலில் பேசுங்கள்.

விரைவாகப் பேசாதீர்கள். ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசுங்கள்.

உங்கள் உதடுகள் வாசிக்கப்படக் கூடியவாறு பேசுங்கள்.

நீங்கள் பேசுவது அவருக்குப் புரியாவிட்டால் குரலை உயர்த்தி மீண்டும் மீண்டும் அதையே சொல்வதை விடுத்து வேறு சொற்களால் சொல்லுங்கள்.

கூட்டமான இடங்களில் வைத்துப் பேசாதீர்கள். ஒதுக்குப் புறமாக சத்தம் சந்தடி குறைந்த இடத்துக்கு கூட்டிச் சென்று உரையாடுங்கள.

காது கேட்கும் கருவி உபயோகிப்பவராயின் அது சரியாக வேலை செய்கிறதா என்பதையும், உரிய இடத்தில் சரியாகப் பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

முகம், கண்கள், கைகள் ஆகியவற்றை பயன்படுத்தி சைகை மொழிகளுடன் பேசுங்கள்.

உங்கள் பேச்சைப் புரிந்து கொள்ள முயற்சித்து அது முடியாததால் அவர் சோர்ந்து விட்டதை அவதானித்தால் உங்கள் உரையாடலை வேறு ஒரு தருணத்துக்கு ஒத்தி வையுங்கள்.

### காது கேளாமைக்குக் காரணங்கள்

ஆயினும் மூப்படைதல் மட்டுமே காது கேளாமைக்கு ஒரே காரணம் என்றும் சொல்லிவிட முடியாது.

தொழில் ரீதியாகவோ(உதாரணம்- இயந்திர ஓசைகள்), பொது வாழ்வின் போதோ கடுமையான ஒலிகளுக்கு நீண்ட காலம் முகங் கொடுக்க நேர்வதுசெவிடாவதைத் துரிதப்படுத்தக் கூடும்.

பல வகை மருந்துகள், காதுக் குடுமி, பரம்பரையாக விரைவில் காது மந்தமாதல், நடுக் காது நோய்கள் போன்றவையும் காரணமாகலாம்.

எனவே நீங்களாக முடிவெடுக்காமல் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது.

**காது மந்தமாவது என்பது வயதானவர்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமானதும் பரவலானது மான பிரச்சினை. 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 15- 40 சதவிகிதத்தினரும், 75 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவிகிதத்தினரும், 85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினரும் செவிப் புலன் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் என்ன சொன்னாலும், அதிக தொகை தருவது நாங்களே!



24 கரட்டுக்கு ரூ. 42,000/-*

22 கரட்டுக்கு ரூ. 36,000/-*



ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுடனும் பெறுமதியான அன்பளிப்பு

## எல் பீ பினான்ஸ், தங்க நகைகளுக்கு உயர் மதிப்பு

* முன்னறிவித்தல் இல்லாமல் நகைகளை மீட்கலாம். * வாரத்தின் 7 நாட்களும் பி.ப. 6.00 வரை திறந்திருக்கும். * தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.

கெனிஸ்டன் 0777 716 986
சுரேஸ் குமார் 0773 384 981
மோகன்ராஜ் 0778 065 387

L B FINANCE
எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி.
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
T: 0114 521 000 | www.lbfinance.com

L B FINANCE GOLD LOANS



இளம் வயதில் ஏற்படும் நரை மற்றும் முடியுதிர்தலை தடுக்க கைகண்ட மருத்துவ தீர்வு



மென்மையான வாசனையூட்டிய

LINK NATURAL அகாலபலித இளநரை, முடியுதிர்தலை தடுப்பதற்காக கைகண்ட ஆயுர்வேத மருத்துவ தைலம்

இளநரை, முடியுதிர்தல் போன்றவற்றை தடுப்பதற்காக,
ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாவித்து நிரூபிக்கப்பட்ட அதிவிஷேட ஆயுர்வேத செயன்முறைக்கமைய,
விஞ்ஞான முறைப்படி நவீன தொழிநுட்பத்தைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.



ரூ.350/=


LINK NATURAL லின்க் நெச்சுரல் புரொடக்ஸ் தனியார் நிறுவனம் சீ.ஐ.சீ. இல்லம் 199, கிவ் வீதி, கொழும்பு 02. தொ.பே.எண். : 011-2409294 மின்அஞ்சல் : info@linknaturalproducts.com இணையம் : www.linknaturalproducts.com



Atlas
tools for success...



எதிர்காலம் வண்ணமயமாகும்




Atlas பெஸ்டல் வர்ணம் தீட்டவும் மனதை மேம்படுத்தவும்

"உங்கள் குழந்தையின் மூளையில் செல் செயல்முறைகள் முழுமையாக செயல்பட்டு நிறைவான மனதை உருவாக்குவதற்கு உதவும் ஒரு வழிவகையாவது வர்ணங்களின் இயக்குமுறையாகும். அதனால் வர்ணங்களை இயக்குதல் போன்ற ஆக்கத்திறன்மிக்க செயல்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தி குழந்தையின் எதிர்கால கனவை நனவாக்கிடுவதற்கு ஊக்குவியுங்கள்."

Dr. சுதர்ஷி செனவிரத்ன
குழந்தை மற்றும் இளம்வயது மனநல மருத்து நிபுணர்
சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனை - கொழும்பு

எதிர்காலத்தை வர்ணம் தீட்டுவோம்

சித்திரம் வரைவோம் பரிசுகளை வெல்வோம்

- அன்புள்ள பெற்றோர்களே, அட்லஸ் பெஸ்டல் சித்திரப் போட்டியில் உங்கள் மகன் / மகளை பங்கேற்கச் செய்யுங்கள்.
- கருப்பொருள்: "எதிர்கால கனவு", படைப்பின் அளவு A3 (42cm x 30cm), சித்திரத்தின் பின்புறத்தில் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், குழந்தையின் வயது மற்றும் பாடசாலையின் பெயரை குறிப்பிடவும்.
- 200 வெற்றியாளர்களுக்கு பெறுமதியான அட்லஸ் பரிசுப் பொதிகள். இறுதித் திகதி 2014 டிசம்பர் 31. முகவரி: 'எதிர்காலத்தை வர்ணம் தீட்டுவோம்' த.பெ. இல.05, களனி.
- எவ்வளவு படைப்புக்களையும் அனுப்பலாம். ஒவ்வொரு படைப்போடும் அட்லஸ் பெஸ்டல் மேலுறைகள் மூன்றை இணைத்து அனுப்ப மறந்துவிடாதீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 நவம்பர் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது